செந்தமிழ்.
[illegible] [illegible] 10.
[illegible] 1928.

JL
R673'ஐ2''N28
N28·1·10·
18/124

664

Registered No. M. 2330.

ஓம்

சித்தாந்தம்

31 OCT 1

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

மலர். க	விபவ ஆண்டு புரட்டாசித் திங்கள் 1928 ௵ அக்டோபர் ௴	இதழ். கo

உள்ளுறை — பக்கம்

கடவுள் படைப்பு	பத்திராசிரியர் மணி. திருநாவுக்கரசு முதலியார்	217
		218
உலகம் தேடுவது யாது	"	
சேக்கிழார் செய்யுளின் தெய்வ நலம் ...	உதவிப் பத்திராசிரியர்	222
உண்மைத் தெய்வ உணர்ச்சி ...	தமிழ்ப்புலவர் சேலை. சகதேவ முதலியார்	224
	R.M. அண்ணாமலைசெட்டியார்	228
கடவுள்	(வேள்) M. துரைக்கண்ணன்	230
சற்காரிய வாதம்	சுவாமி இராமசுவாமி	237
சிவமணிகள்		238
செய்தித் திரட்டு		239
மதிப்புரை ...		240
வரவு செலவு கணக்கு		

பத்திராசிரியர்

மணி. திருநாவுக்கரசு முதலியார்,
ஆசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

உதவிப் பத்திராசிரியர்

வித்துவான்

பாரிப்பாக்கம் - கண்ணப்ப முதலியார்.

சைவ சித்தாந்த மகாசமாஜ காரியாலயம்,
92, வரதா முத்தையப்பன் தெரு,
சென்னை.

1928

சித்தாந்தம்

ஓர் உயர்ந்த மாதத் தமிழ்ப் பத்திரிகை

சென்னைச் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் சார்பிலே திங்கடோறும் வெளிவரும் உயர்ந்த தத்துவப் பத்திரிகை. சைவ சித்தாந்தத்தின் உண்மை நிலையை உணர்த்து முகத்தான் பல சமயக் கொள்கைகளையும் எடுத்துரைப்பது. செந்தமிழ் நடையிலே தெளிவாக எழுதப்படும் பல இனிய அரிய கட்டுரைகளை உடையது. ஆங்கிலமொழி பெயர்ப்பான அழகிய கட்டுரைகளையும் ஆங்காங்குக் கொண்டு மிளிர்வது. தமிழறிவைப் பெறுவதற்கும் சைவ உண்மைகளை உணர்வதற்கும் ஒரு பெருந் துணையாயது.

சந்தா விவரம்

ஆண்டு 1-க்கு தபாற்கூலி யுட்பட	உள் நாடு (இந்தியா, பர்மா, சிலோன்)....	ரூ.	1	8	0
	வெளி நாடு	,,	2	0	0

குறிப்பு :—ஓராண்டிற்குக் குறைந்த சந்தா கிடையாது.

(1) பத்திரிகை ஆங்கில மாதம் 10-ந்தேதி வெளிவரும்.

(2) சந்தாத் தொகையை முன்னரே செலுத்தியாவது அல்லது வி. பி. யில் செலுத்தியாவது பத்திரிகை பெற்றுக்கொள்ள வேண்டும். வி. பி. யில் பத்திரிகை பெறுபவர்கள் அணா இரண்டு ரிஜிஸ்டிரேஷனுக்காகத் தனியே செலுத்தவேண்டி யிருப்பதால் மணியார்டர் மூலம் பணம் அனுப்பிப் பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளுதல் நலம்.

(3) கடிதம் எழுதும் பொழுதெல்லாம் ஒவ்வொருவரும் தங்கள் சந்தா எண்ணைக் குறிப்பிட்டு எழுதுதல் வேண்டும்.

(4) ஆண்டினிடையில் சேருகிறவர்கட்கு முன் பத்திரிகைகள் கூடிய வரை அனுப்பப்படும்.

(5) பத்திரிகை சேராதவர்கள் அவ்வம்மாதம் 20-ந் தேதிக்குள் எழுதித் தெரிந்துகொள்ள வேண்டும். அப்படித் தவறினவர்கள் பத்திரிகையின் கிரயம் அணா $2\frac{1}{2}$ அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

(6) இடம் மாறுபவர்கள் அடுத்த பத்திரிகை தங்களுக்கு வந்து சேரும் வண்ணம், தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துகொண்டு, புது விலாசத்தை நமக்கு உடனே அறிவித்தல் வேண்டும்.

(7) வியாச மெழுதுபவர்கள் கடிதத்தின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதி அனுப்ப வேண்டும். ராஜ நிந்தனை, மத தூஷணை, மனித தூஷணை முதலியவைகளும் சைவ சித்தாந்தத்திற்குப் பொருத்தமில்லாத விஷயங்களும் பிரசுரிக்கப்பட மாட்டா. வியாசங்களைத் திருத்தவும், நிறுத்தவும் ஆசிரியருக்குப் பூரண உரிமை யுண்டு.

(8) வியாசதாரர்களின் அபிப்பிராயங்கட்கு ஆசிரியர் உத்தரவாதியல்லர்.

(9) சந்தாதாரர்களும், கட்டுரையாளர்களும் பதில் விரும்பின் ரிப்ளை கார்டாவது, தபால் பில்லையாவது அனுப்பி வைத்தல் வேண்டும்.

(10) விளம்பர விகிதம்	முழுப் பக்கம்	ரூ.	10	0	0
	அரைப் பக்கம்	,,	5	0	0
	கால் பக்கம்	,,	3	0	0

(11) இதர விவரங்கட்குக் கீழ்வரும் விலாசத்திற்கு எழுதவும்.

சித்தாந்தம் ஆபீஸ்,
88, திருப்பள்ளி தெரு, ஜார்ஜ்டவுன், சென்னை.

ஓம்

சித்தாந்தம்

31 OCT 1928

“எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே”

மலர் ௧	விபவ ஆண்டு புரட்டாசித் திங்கள் 1928 ௵ அக்டோபர் ௴	இதழ் ௧௦

கடவுள் படைப்பு

[பத்திராசிரியர் : மணி. திருநாவுக்கரசு முதலியார்]

இன்பம் நிறைந்த செங்கதிர் தன்னை ஈந்தொளி தந்தனையே !
தண்மை மிகுந்த திங்களைத் தந்தே தழைந்திடச் செய்தனையே !

வண்ணைச் சிறந்து மின்னும் மீன்களை வானில் வைத்தனையே !
உண்ணும் நீர்தனை விண்ணின் நின்று ஒழுகச் செய்தனையே !

மன்னுயிர் எல்லாம் மகிழ்ந்து வாழ மரங்களைப் படைத்தனையே !
இன்னுயிர் இன்புற நன்மணம் கமழும் எழில்மலர் காட்டினையே !

ஓங்கிய மாமலை தன்னைப் படைத்தெமை ஓங்கச் செய்தனையே !
நீங்கும் நதிகளை ஓட வைத்து நிறைபயன் அளித்தனையே !

பற்பல கற்கள் தம்மைத் தந்து பணிகள் பூட்டினையே ! [யே !
பொற்புறு பொன்களைப் படைத்துலகத்தில் புதுமைகள் காட்டினை

விரிந்த வானும் பரந்த கடலும் விளங்க வைத்தனையே ! [யே !
திரிந்து விலங்கும் பரிந்து தொழில்செயத் தெரிந்து படைத்தனை

ஆடும் மயிலும் பாடுங் குயிலும் அழகுறப் படைத்தனையே !
கூடும் பறவைக் கூட்டம் அனைத்தும் குலாவ வைத்தனையே !

என்றும் எம்மைக் காக்க இசைந்த இன்னருள் வாழ்த்துவமே !
ஒன்றும் உள்ளந் துவகை பொங்க உயர்தலை தாழ்த்துவமே !

இஃது இவ்வாசிரியர் இயற்றிய 'செந்தமிழ்' வாசகம் நான்காம் புத்தகச் செய்யுள் வரிசையினின்றும் எடுக்கப்பட்டது.

உலகம் தேடுவது யாது

[பத்திராசிரியர்: மணி. திருநாவுக்கரசு முதலியார்]

உலகம் தேடுவது யாது என்னும் வினாவிற்கு விடை யிறுப்பது சாலவு மெளிது. உயிர்களெல்லாம் எவ்விடத்தும் எக்காலத்தும் இன்பத்தையே நாடி நிற்கின்றன. கண் வியக்கத் தக்க காட்சி எங்கே யென்றும், காது நயக்கத்தக்க ஓசை எங்கே யென்றும், நா சுவைக்கத்தக்க உணவு எங்கே யென்றும், உடம்பு மகிழத் தக்க சேக்கை எங்கே யென்றும், மூக்கு மோக்கத் தக்க நறுமணம் எங்கே யென்றும் இவ்வைம்புல நுகர்ச்சியும் ஒருங்கே பொருந்தியுள்ள இடம் எங்கே யென்றும் ஒவ்வொரு கணத்தும் உயிர்கள் தேடி யலைவதைக் காண்கின்றோம். இன்பம் இன்பம் என விரும்புகின்றனரே யன்றி மக்கள் நிலைத்த இன்பம் யாண்டுள தென்றும், அதனைப் பெறுகின்ற வழி யாதென்றும் அறியாது தத்தளிக்கின்றனர். உலகம் தோன்றிய நாள் தொட்டு இன்று வரை இவ் வினாவை எழுப்பாத மக்கள் எந்நாட்டினுமில்லை. ஒரு சிலர் உலகம் துன்பத்துக்கே நிலைக்கள மென்றும், அதனால் இன்பத்தை யெய்துதல் என்றும் இயலா தென்றும் முடிவு கட்டினர். வேறு சிலர் உலகத்தில் எய்துவது சிறிது பொழுது நிகழும் இன்ப மாதலின் சிற்றின்ப மென்றும், அவ்வின்பத்தை விழைவோர் அதனான் வரும் துன்பத்தையும் நுகர்ந்தே தீர வேண்டு மென்றும், இக்காரணம் பற்றி இன்ப துன்ப மிரண்டும் அற்று நிற்றலே அடுத்த செயலாகு மென்றுந் துணிந்தனர். மற்றுஞ் சிலர் உலக வின்பம் சிற்றின்ப மாதலின் அதனை வெறுத்துச் செம்பொருளாகிய கடவுளின் திருவடியின்பம் பேரின்ப மாதலின் அதனையே அவாவி இருத்தல் வேண்டு மென்றும், அது காரணமாகச் சிற்றின்பத்துக்கு அடிப்படையாகிய மனைவி, மக்கள், சுற்றம், பொருள் ஆகிய எல்லாவற்றையுந் துறந்து தவங் கிடத்தல் வேண்டு மென்றும் எண்ணினர். இன்னுஞ் சிலர் பற்றற்ற ஒருவன், வீட்டிலே நின்று அறங் காத்தாலும் காட்டிலே சென்று தவம் ஆற்றினாலும் ஒன்றே யென்றும், அதனால் பற்றறு நிலை செயற்பால தென்றும் கருதினர். பின்னுஞ் சிலர் இளமையிலேயே உலகத்தைத் துறந்து தவஞ் செய்தும் விரதங் காத்தும் மனமாசு தீர்ந்து மெய்யுணர்வடைந்து அவா நீக்கி அந்நிலையே வீடுபேற்றை யடையவேண்டு மென்று வற்புறுத்தினர். இன்னோரெல்லாம் உலகத்திலே பெரும்பான்மையான மக்கள் ஒழுகத் தக்க சிறந்த முறையை எடுத்துக் காட்டினரெனக் கூறுதற்கில்லை. இத்தகைய அரிய பெரிய ஒழுக்கங்கள் 'தவமுந் தவமுடையார்க் காகும்' என்னும் அமுத மொழிக்கிணங்க யாரோ ஒரு சிலரால் மட்டும் ஒழுகற்பாலனவாம். இவற்றையே மீண்டும் மீண்டும் நாம் கற்றுங் கேட்டும் வருதலால் விழுப்பயன் யாது மில்லை. பட்டினத்தடிகள் துறந்தா ரென்றால் அவரைப் போல எத்தனைபேர் துறக்க முடியும்? அதனாலன்றோ 'பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப்போல் ஆரும் துறக்கை அரிதரிது' என்றார் தாயுமானவரும். புத்தர் அரச போகத்தைத் துறந்தாரென்றால் எத்தனைபேர் அவரைப் போல் போகத்தைத் துறக்க வல்லவ ராவர்? இளங்கோவடிகள் எத்தனைபேருளர்? ஜனகராஜனைப்போலும் தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனாரைப் போலும் இளையான் குடிமாறர், இயற்பகையார், திருநீலகண்டர், சிறுத்தொண்டர் முதலான அருட்பெருஞ் செல்வர்களைப் போலும் அகப்புறப் பற்றுக்களொழிந்து மனையறத்தைக்கடைப்பிடித்தொழுகு மாற்றல் எத்துணையார்க் குள்ளது? பேரின்பத்தையே நாடிக்கொண்டு சிற்றின்பத்தை வெறுத்து மனைவாழ்க்கை செலுத்துவதும் யாவர்க்கு மியல்வதன்று.

18/124

இன்னோரன்ன காரணங்களால் மக்கள் இம்மையிலேயே தூய இன்பத்தைப் பெற வேண்டிய நல்வழிகளைக் கண்டுபிடித்து அவ்வாறு ஒழுக வேண்டுவது இன்றியமையாத தாகும். பொருளில்லை யானால் உலகத்தில் அறத்தை வளர்த்தற்கும் இயலாது; அன்பை வளர்த்தற்கும் இயலாது. அருளென்னுங் குழவியும் மெலிந்து சோரும். அருளுக்கே பொருள் வேண்டுமானால் அறத்துக்கும் இன்பத்துக்கும் பொருள் வேண்டு மென்பது சொல்ல வேண்டுவதில்லை. இக்கருத்தை நமது பொய்யில் புலவர், 'அருளென்னு மன்பீன் குழவி பொருளென்னுஞ் செல்வச் செவிலியா லுண்டு' என்னும் அழகு ததும்பும் இனிய திருக்குறளால் எடுத்து விளக்கினர். ஈண்டு அருளைக் குழவியாகவும் அன்பை நற்றாயாகவும், பொருளைச் செவிலித்தாயாகவும் உருவகப்படுத்திக் கூறி யிருப்பதும், 'உண்டு' என்னும் வினை கொடுத்து முடித்திருப்பதும் நோக்குந்தோறும் நோக்குந்தோறும் பொருட்பேறுற்றுப் பல நுட்பதிட்பங்களைத் தெரித்துப் பொருளின் ஆற்றலை இனிது புலப்படுத்தல் காண்க. இதனானே இம்மைக்குப் பொருள் எத்துணை வேண்டற் பாலதோ அத்துணை அது மறுமைக்கும் வேண்டற்பால தென்பது போதரும்.

இம்மையிலே நாம் வாழ்கின்ற வாழ்வைக் கொண்டே மறுமையில் நமது வாழ்வு இவ்வா றாகுமெனக் கடிதில் ஊகித்து விடலாம். இம்மையில் வறிஞனாக உள்ள ஒருவன் மறுமையில் எங்ஙனஞ் சிறந்த நிலையை அடைந்து விடுவான்? வறுமையிற் செம்மை யுடையராய் உள்ளம் நிரம்பிய உத்தமரைப் பற்றி யாம் இங்கொன்றும் கூற வில்லை. இங்குக் கூறுவன யாவும் பெரும்பான்மையான மக்கட் கூட்டத்துக்கே ஒத்தவையாம். இக் காரணங்களால் பொருளை ஒருவன் எவ்வாற்றானும் ஈட்ட வேண்டு மென்பது முடிக்கப்பட்டது.

நன்று: பொருளை ஈட்டுதலினாலே ஒவ்வொருவரும் இன்பம் பெறலாமோ? ஒருவன் கோடிக்கணக்காக அல்வழியிலே பொருளை ஈட்டுகின்றான். அவன் இன்பம் துய்ப்பானா? பொய்க்கரியுரைத்தும், புறஞ்சொற் கூறியும், ஏழை எளியவர்களை வருத்தியும், நம்பினோரை வஞ்சித்தும், ஈட்டும் பொருள் தன்னை யுடையானுக்கு எஞ்ஞான்றும் இன்பம் பயத்தல் இன்று. ஆனால் அவன் நமது தூல நேத்திரத்துக்குப் பேரின்ப முடையவன்போலத் தோன்றுவான். பளபளப்பான பட்டாடை யுடுத்தும், மின்னென மிளிர்கின்ற வயிரப் பணி பூண்டும், அழகிய அரண்மனையில் உறைந்தும், தந்தச் சிவிகையில் ஊர்ந்துஞ் செல்வானாயினும் அவன் உள்ளத்தைத் தேடிப் பார்த்தால் அங்கே ஒரு சிறு குடிலிலே உறைந்து கூழுக்கும் ஏக்கற் றிருக்கும் ஏழை ஒருவனுக்கு

சேக்கிழார் செய்யுளின் தெய்வ நலம்

[பகுதி—2.]

[உதவிப் பத்திராசிரியர்]

சோழவள நாட்டின் அணிகலன் எனச் சிறந்து அழகொளி பரப்பும் காவிரியாற்றின் மாபெருஞ் சிறப்பினை எடுத்திசைப்பான் புகுந்த ஆசிரியர் சேக்கிழார் பெருமான்,

வண்ணநீள் வரைதர வந்தமேன் மையால்
எண்ணில்பே றங்களும் வளர்க்கு மீகையால்
அண்ணல் பாகத்தை யாளுடைய நாயகி
உண்ணெகிழ் கருணையின் ஒழுக்கம்
[போன்றது.

என்றதோர் அழகிய பாடலான் நம்முள்ளத்தினை யுருக்கி அருட்பெருக்கிலே திளைக்குமாறு செய்தல் கவனிக்கற்பாலது. இங்கே, மலைக்கட் டோன்றுதலானும், தனது நீர் வளத்தால் விளையுளாக்கி அறச் செயலினைத் தினையும் அளித்துதவலானும் (குடகமலையிடத்தே தலைவினையுடைய) காவிரியாறானது, பர்வதராஜ புத்திரியாக அவதாரஞ்செய்து, யாவரானும் அண்ணற்கரிய கண்ணுதற்கடவுளது இடப்பாகத்தைத் தம்மாட்சியாக வுடைய காமக்கண்ணியாரது கருணைப் பிரவாகத்தினை நிகர்த்து விளங்கா நின்றதென, மலையரையன் பொற்பாவை யொடுங் காவிரியாற்றினை உவமை கூட்டிய வாற்றான், அவ்வம்மையார் என்றும் பான் மொழிக் கன்னியாம் இளமைத் திருக்கோலம் தாங்கி விளங்குதலொப்ப இவ்வியாறும் என்றுந் தனது இளமைச் செல்வி குன்றுத புனித முடைத்தாதலும் அம்மையாரது பெருங் கருணைக்கிலக்கானோர் சத்திநிபாத முற்றுப் பேரின்ப வீடெய்திப் பெருமைபாகத் தோய்த்தலொப்ப, இவ்வியாற்றினது பெருந்துறையின்மூழ்கிய நன்மக்களும், புனிதமுற்று அம்மைப் பெரும் பேறெய்துதல் திண்ணமாதலும், கருணை சொரூபியாக விளங்கும் அம்மையாரது திருவருட் பெருக்கு, என்றுங் குன்றுதலி கினைப் பாதுகாத் தளித்தலொப்ப, இவ்வியாற்று நீரும் என்றும் தண்ணீர்மை குன்றுது நம் நாட்டினைக் காத்தளிக்க வல்ல தாதலும், அம்மையார் யாவரானும் அண்ணற்கரிய கண்ணுதலாகந் தோய்ந்து நின்றதொப்ப இவ்வியாறும் யாவரானும் அளத்தற்கரிய பெருங்கடலாகந் தோய்ந்து நிற்பதாதலும், உய்த்துணர வைத்த நம் சேக்கிழார் பெருமான் திருவுள்ளம் பெரிதும் போற்றற்பாலது.

காவிரியாறு என்றுந் தண்ணீர்மை குன்று துலகினைப் பாதுகாத் தளிக்க வல்லதா மென்பது,

“ கோனிலை திரிந்த கோடை நீடினும்
தானிலை திரியாத் தண்டமிழ்ப் பாவை ”

எனவரும், நாத்தலைங் கனிந்த சீத்தலைச் சாத்தனாரது சொற்சுவை பழுத்த இனிய அழகிய மணிமேகலை அடிகளானும்,

‘ வசையில் புகழ் வயங்கு வெண்மீன்
றிசை திரிந்து தெற்கேகினும்
தற்பாடிய தளியுணவிற்
புட்டேம்பப் புயன்மாறி
வான்பொய்ப்பினுந் தான்பொய்யா
மலைத்தலைய கடற்காவிரி
புனல்பரந்து பொன்கொழிக்கும்
விளைவறா வியன் கழனி ’

எனவரும் தமிழழகு பழுத்த உருத்திரங் கண்ணனாரது பட்டினப்பாலை அடிகளானும் எடுத்துரைக்கப்படுதல் காண்க.

அண்ணலாரது அருட் சத்தியாக விளங்கும் நமதம்மையார், என்றும் பச்சிளங் கன்னியாம் இளமைத் திருக்கோலந் தாங்கி விளங்குதல்,

“ சிவஞ் சத்தி தன்னை யீன்றும்
சத்திதான் சிவத்தை யீன்றும்
உவந்திருவரும் புணர்ந்திங் குலகுயி
ரெல்லா மீன்றும்
பவன்பிரம சாரி யாகும் பான்மொழிக்
கன்னி யாகும்
தவந்தரு ஞானத்தோர்க் கித்தன்மை தான்
தெரியு மன்றே”

என வருஞ் சிவஞான சித்தித் திருவிருத்தத்தா னுணர்க. இன்னும் உலகினை ஊட்டி வளர்த்து நிலைநிறுத்திக் காப்பது நீரே யாதல் ஒப்ப, அண்ட சராசரங்களனைத்தினையும் ஆக்கியளித்து அருள்புரிந்து வருவது அருட் சத்தியே என்பதூஉம், எந்நீர்க்கும் முந்நீராய் நின்றுதவுவது கடலே யாதலொப்ப இறைவியை எவ்வாற்றானும் பிரியா தொருங்கியைந்து நின்று உலகினைத் தன்னாணை வழிநிறுத்தி வினை முதலாய் ஒளிர்வோன் இறைவனே என்பதூஉம், இதனாற் பெறக் கிடந்தவாறுணர்க. இனி, நீரானது தனக்கெனவோர் குணங் குறிகளின்றி, தான் சார்ந்த இடத்தின் குணங் குறிகளின் மயமாய் இலைந்து விளங்குதலொப்ப, அருட் சத்தியாம் இறைவியும் அவ்வவ்வான் மாக்களின் கன்மானு குணங்களின் நிலைகளுக் கேற்ப நின்றிலங்கிடுமாறுங் கண்டு கொள்க. ‘ எத்திறம் நின்றா னீசன் அத்திறம் அவளும் நிற்பள் ’ என்னும் சிவஞான சித்தித் திருவாக்கு இங்கே கருதத் தக்கது. இறைவன் அன்பர் நினைந்த வடிவொடு விரைந்து சேரும் அருட் பெருங் குணமுடைய னாதலானும், அவனதருட் பெருங் கோல நிலைகளனைத்தும் ‘நந்தம் கருமேனி கழிக்க வந்த கருணையின் வடிவ ’ நிலைகளே யாதலானும், அக்கருணை தானும் ஆன்மாக்களின் பரிபாக நிலைகளுக் கேற்பப் பயன் அளிக்க வல்ல நியதியொடு நின்று நினைவதாகலானும் இறைவனொடு அவ்வத்திறத்தின் ஒத்து ஒருங்கியைந்து நிற்கு மருட்சத்தியது நிலையும், அவ்வருளொடு எவ்வாற்றானும் பிரிப்பின்றித் தாதான்மியமாய் உடன் கலந்துலகினை ஆக்கியும் அளித்தும், போக்கியும், அருள் தரவல்ல புனிதனாக இலங்கும் இறைவனது கலையும் ஒன்றே யாமென்ப துணர்ந்து கொள்க. இம்மை யுலகிற் கின்றி யமையாத நீர்போலும் அம்மை யுலகில் அருள் என வற்புறுத்தி, இறைவனது அருளொளியாம் பராசத்தியின் பாற்படும் நம்மனோரை ஆற்றுப் படுத்தல் இங்கே பெறக் கிடக்கின்றது. ‘ அவளால் வந்த ஆக்கமிவ் வாழ்க்கை எல்லாம் ’ என்னும் அருணந்தி சிவத்தின் திருவாக்கினையும் சிந்தித்துக் கொள்க. இறைவனது சங்கற்ப முகிழ்ப்பாம் அருட்சத்தியி னியக்கமே சகல சராசரங்களின் தோற்றங்கட்கும் காரணமா மென்பது சைவ சித்தாந்த முடிபாம் என்க. காவிரியாறு பிறப்பியலான் அம்மையாரையும் தண்ணளியான் அம்மையாரது அருட்குணத்தினையும் நிகர்ப்பதா மென்பது வெள்ளிடை மலையாம். இங்ஙனம் ஆற்றின் சிறப்பினை எடுத்துரைப்பான் புகுந்த ஆசிரியர் சேக்கிழார் பெருமான், இறைவனது அருள் வெள்ளத்தி னிலக்கணமுணர்த்தி ஆன்மாக்களனைவரும் அப்பரமானந்தப் பழங்கடலுட் புக்கினிக்குமாறு செய்தமை அருமையினருமை யுடைத்தாதல் காண்க.

உண்மைத் தெய்வ உணர்ச்சி

[தமிழ்ப்புலவர் சேலை. சகதேவ முதலியார்]

தெய்வம் ஒன்றுண்டென்னு முணர்ச்சி மகனாய்ப் பிறந்த எவனுக்கு முண்டு. என்னை, உலகின் கண்ணே பிறந்துழலு மகன் தன தறியாமையையும் வன்மை இன்மையையும் தான் செய்யுங் காரியங்களின் முயற்சி யளவிற் காண்கின்றான். தொடுக்குங் காரியங்கள் தூய்மைய வாயினும் நேர்மைய வாயினும் அவன் இடையறா முயற்சியு மூக்கமுங் கொண்டியப்பானாயினும் அவை கடை போகாமையைக் கண்கூடாக் கண்டு கலுழ்கின்றான்; நோய் கொண்ட மகன் றனக்கு மருத்துவ நிபுணர்களைக் கொண்டு மருந்தூட்டினும் அம்மகன் தன் கண் முன்னிலையிலேயே அம்மைக்கண் செல்வதைக்கண்டு அலமந்து கண்ணீர்விட்டுக் கதறி யழுகின்றான்; தீரா நோயொன்றைக் கொண்ட ஒருவன் அந்நோயுடனே நாடோறும் வருந்தி நின்றும் நீண்ட காலம் ஆயுளோடிருப்பதையும், தேகதிடனும் மனவன்மையுங் கொண்டோ னொருவன் திட்டென விழுந்து பொட்டெனப் போவதையுங் கண்டுங்கேட்டு மிருக்கின்றான். மேலும் நல்லார் மாழ்குவதையும் அல்லார் மகிழ்வதையும் பொல்லார் பொங்குவதையும் வல்லார் தயங்குவதையும் மகன் காணாத நாளுண்டோ! இம்மட்டோ, இயற்கை விநோதங்கட்கும் இடையிடையே காணும் உற்பாதங்கட்கும் காரணங்களை ஊகித்தாவது முற்றுமறிய இவனால் இயலுமோ! அவற்றை மாற்றவாவது ஆற்றவாவது அவனா லணுவளவாயினுங் கூடுமோ! இவற்றையெல்லா நோக்குமகன், 'எப்பொருட்கு மேலான மெய்ப் பொருளொன் றுண்டு, அதுவே இவ்வுலகின்கண் யாவற்றினையும் நடாத்தி வைக்கின்றது, அஃது இன்னதை இன்னவாறு இன்ன காலத்தில் இயக்குவிக்கின்றது என்பதை என்னால் எண்ணி யறிய இயலாது, யாவும் அதன் கருத்தின்படியே நிறைவேறுகின்றன' என மனத் தெளிவடையாது மற்றியாது செய வல்லானவன்?

இவ்வுண்மை தெரித்தற் கன்றோ உலகின்கண் பற்பல சமயங்களில் பலப்பல சமயாசாரியர்கள் தோன்றித் தாந்தாம் கண்டனவற்றைத் தந்தம் நாட்டின் கண்ணுள்ள மககட்குழாங்கட்கு அறிவுறுத்திப் போந்தனர். இவர்கள் கடவுளைப் பற்றித் தத்தமக்குத் தோன்றியவாறு ஒன்றுபட்டும் வேறுபட்டும் கோட்பாடுகளை ஏற்படுத்தலாயினர். இதுவே இவ்வுலகின்கண் பற்பல சமயங்கள் தோன்றி நிலவுதற்குக் காரணமாயிற்று. கடவுள் உண்மையைப் பகரும் இச்சமயங்கள் அவர்தம் இலக்கணத்தைப் பற்றிப் பற்பலவாறு பேசுகின்றன. கடவுள் ஒருவரே உள்பொருள், மற்றவையனைத்தும் இல்பொருள் என்றும்; தீயே கடவுள் என்றும்; கடவுள் பூமியில் அவதாரங்கள் எடுப்பாரென்றும், அவ்வாறெடுத்த ஒவ்வொரு அவதாரமும் கடவுள் என்றும்; கடவுட்டன்மையொடு தோன்றி அற்புதங்கள் நிகழ்த்திய அடியார்களின் மூலமே அக்கடவுளைக் கண்டு முத்தி யடைய வேண்டும் என்றும்; கடவுட்கு மனைவி மக்கள் உண்டென்றும் இன்னோரன்ன இலக்கணங்களால் கடவுளைப் பற்றி இயம்பாநிற்கும் இம்மதங்கள்.

ஒரு மதத்தை அநுசரிக்கும் மக்கள் அம்மதக் கோட்பாட்டினின்றும் பிறழாமல் அதனெல்லைக்கு ணின்று கட்டுப்பட்டு நிற்கின்றாரில்லை. சில ரூபமாகக் கடவுளைக் கண்டு தரிசித்து ஆனந்திக்கும் ஒருவன் ஏனைய மக்களுடன் சச்சரவு பட்டுக் கோயிலைத் தாளிட்டுப் போட்டு ஏடுமெழுத்தாணியுமாய் நியாய வாதியின் பின்னாற் றிரியினும் திரிவான். தன்சமயமே உயர்ந்தது, ஏனையோர்களையெல்லாம் அதனையே தழுவும்படி செய்யச் சாத்திரக் கட்டளை யுண்டு என்பானொருவன் கையுங் கத்தியுமாய் மற்றவர்களை வெருவச் செய்து அவர் தம் மனப்பான்மை யின்றியே அவர்களைத் தன் மதத்தை யநுசரிக்க வற்புறுத்தியும் வருகிறான். கடவுள் அன்பு நவமானவர், ஆகையின் எல்லா உயிர்களையும் அன்போடு பார்க்க வேண்டும் என்பானொருவன் உயிர்க்கொலை புரிந்து ஏனைய மக்கள் மீது பொறாமை கொண்டு பொய் வேடம் பூண்டும் திரிகிறான்.

இப்போது இவ்வுலகின்கண் நிலவு மதங்கள் தோன்றி எத்தனையோ நூற்றாண்டுகள் கழிந்தன. இவற்றின் போதனையால் மக்கட்குள் பொய் பொறாமைகள் ஒழிந்தனவா? கொலை களவுகள் மறைந்தனவா? ஏற்றத் தாழ்வுகள் தீர்ந்தனவா? செல்வத்திற் சிறந்தானொருவன் தான் உண்ணான், சோற்றுக்கும் உடுக்கும் சீலைக்கும் சென்றது போக மிகுந்த பொருளை மிடியோர்க்கீந்து மகிழ்கின்றானா? அன்றி அதனைத் தன் சுற்றத்தார் நண்பர்கட்காயினு முதவி நலம் பெறுகின்றானா? உடுக்கவு முண்ணவு முடையானொருவன் மேன்மேலும் பொருள் சேர்ப்பதைவிட்டு உலகத்துக்கென்று உண்மை யுள்ளத்தோடு ஊழியஞ் செய்கின்றானா? மேலும் உலகின்கண் போர்க்களங்கள் இல்லா தொழிந்தனவா? உன் தெய்வம் என் தெய்வம் என்கின்ற போராட்டம் போயிற்றா? உடன் பிறந்தோராயினும் நியாய மேடை ஏறா தொழிந்தனரா? மக்கள் ஒற்றுமை என்கின்ற நற்றவம் புரிகின்றார்களா? தன்னலமிழக்க வேண்டும், பிறர்க்கென உழைக்க வேண்டும் என்று வாய்ஞானம் பேசுவோர் அதனைச் சிறிதளவாயினுங் கைக்கொண்டு தம்மையடுத்தவர்க்காவது நன்மை புரிகின்றாரா? உண்ணுஞ் சோற்றுக்குங் கொள்ளுங் கூலிக்கும் தக்க அளவாகவாவது தம் கடமையைச் செவ்வனே செய்து முடிப்போர் நூற்றுக்கு ஒருவராவது உண்டா? உண்மைக் கல்வியில் விருப்பமுடையோர் உலகத்தில் எத்தனை பேர்? மண் பெண் பொன்னாசைகளை வெறுக்க மனத்திற் கருத்துக் கொண்டவராவது எத்தனை பேர்? பொன் போன்ற மனத்தைச் சஞ்சலத்தாற் குரங்காக்காதவர் எத்தனை பேர்? இவைகளையெல்லாம் இம்மதங்கள் போதிக்கவில்லையா? இப்போதனைகளெல்லா மெவ்வாறாயின!

ஒரு மதத்தோனாய்ப் பிறந்தவன் அதன்கண் தன் மனத்துக் கொவ்வாதனவற்றையும் காண்கின்றான்; பிறமதங்களின்கண் தன் மனப்பான்மைக் கொத்தனவுங் காண்கின்றான்; இன்னுந் தன் மனத்துக் கொத்தன சில இம்மதங்களிலெல்லாம் இல்லாதன வாகவுங் காண்கின்றான். ஆகையால் இப்போது உலகில் வழங்கிவரும் மதங்கள் யாவும் அரை குறையானவைகளாகவே காணப்படுகின்றன. எம்மதம் எல்லா மதங்களையும் தன்னுட்கொண்டு, திகழுமோ எம்மதம் ஒரு பரிசுத்த ஆவல்கொண்ட ஆன்மாவின் தாகத்தைத் தணிக்குமோ, எம்மதம் பதி பசு பாசங்களின் இலக்

கணங்களை ஐயந்திரிபறத் தெரிக்குமோ, எம்மதம் அத்தகைய ஆன்மாவுக்கு இம்மையக்கண் நிலைபேறான இன்பங் கொடுக்குமோ, எம்மதம் இதற்குத் தக்க வழிகளைப் போதிக்குமோ, அதுவே எவ்வாற்றானும் யாவருக்கும் எக்காலத்திலும் சம்மதமான ஒப்பற்ற மதமாகும். அதுவே மதாதீதம் எனப்படும் சமரச சன்மார்க்க சைவமதமாம்.

மகன் இத்தகைய மதத்தைக் கைக்கொண்டவனாய், மனமொழி மெய்களில் ஒற்றுமை யுடையவனாய், எல்லா உயிர்கள் மீதும் ஒத்த அன்புடையவனாய், தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்பவனாய், தனக்கு நேர்ந்த கடமைகளைச் சிறிதும் வழுவாதுசெய்து முடிப்பவனாய், நல்ல வழியிற் பொருளீட்டி எல்லோருக்கும் ஊருணிபோற் பங்கிட்டுக் கொடுப்பவனாய், உற்றவிடத்தில் உயிர் வழங்குபவனாய் உலகின்கண் இருத்தல் வேண்டும்.

பஞ்ச பாண்டவர்களின் மூத்தோனாகிய தருமபுத்திரன் ஒரு முனிவரிடம் அறங் கேட்கத் தலைப்பட்டு அவர் 'அறஞ்செய விரும்பு' என்று முதற்கண் எடுத்துப் பொருள் விளக்கிய பின், அவன் அவரை நோக்கித் தனக்கு அம்மொழி யொன்றே போதுமென்றும், அதற்குமேல் தனக்கொன்றுஞ் செய்ய முடியாதென்றும் சொல்லி அதனோடு அறவுரையை நிறுத்திவிட அம்முனிவரைக் கேட்டுக் கொண்டானென்று ஒரு கதை வழங்குகின்றது. இஃது ஒருவன் கற்றபடியே நிற்றல் வேண்டுமென்பதை உணர்த்தா நிற்கின்றதன்றோ? ஆயினும் நமது நாட்டில் நாலுவேதம், ஆறு சாத்திரம், அறுபத்து நான்கு கலைஞானம், பதினெண் புராணம், உபநிஷத்துக்கள், இதிகாசங்கள், நீதி நூல்கள் ஆகிய இவைகளெல்லாம் கணக்கற்றுக் கிடக்கின்றன. இவைகளில் ஓதப்பட்ட ஒழுக்கங்கள், அறங்கள், தானங்கள், நீதிகள் முதலியவை எண்ணிக்கையி லடங்கா. ஏனைய நாடுகளில் இவ்வளவு நீதிநூற் புத்தகங்களும், நியமாதிகளும், விதி விலக்கு நூல்களும் கிடையவே கிடையா. இப்படி யிருக்க இவைகளை யெல்லாம் நம்மவர்கள் எவ்வளவு தூரம் அநுஷ்டிக்கிறார்கள்?

நொண்டி முடங்கட்குத் தம்மாலியன்றளவாயினும் உதவி புரிபவர்கள் எத்தனைபேர்? மோட்டார் வண்டியிற் சென்று புகைவண்டியில் முதல் வகுப்பில் ஏறிப் போவோர் நொண்டி முடங்களைத் தடியெடுத்தடிப்பதை இச் சென்னையிலும் பிறவிடங்களிலும் எங்குங் காணலாம். 'பொய்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்குமெனின்' என்னுந் திருக்குறளில் 'புரைதீர்ந்த' என்பதை ஒழித்து மற்றப் பகுதியை மாத்திரம் கைக்கொண்டு பொய்க்கரி யுரைத்துந் தன்னலங்கெடாது பிறர் நலத்துக்கு ஊறுசெய்பவர்களை நியாயத்தலங்கள் தோறும் நின்று காணலாகுமே. ஐம்பொறிகளின் புலன்களை அடக்க வேண்டுமென்றும் உட்பகை ஆறையும் அழிக்கவேண்டுமென்றும் ஞான நூல்களெல்லாம் வாயுற வோங்கி முழங்குகின்றன. ஆயினும் அவைகட்கான வசதிகள் சிலவேனும் உண்டா? கோயில்களில் கணிகை மாதர் இருக்கலாகா தென்பதை ஆமோதித்துப் பேச எத்தனைபேர் முன் வருவார்கள்? தெருக்களிலும் வீடுகளிலும் கோபத்தால் வரும் சண்டை சச்சரவுகள் சற்றேனுங் குறைகின்றனவா? தினசரிப் பத்திரிகைகளில் வாராத தான தருமச் செயல்

களின் எண்ணிக்கை எவ்வளவு? பலவாறு சொல்லி என்ன? நமது நாட்டில் கற்றல் வேறு நிற்றல் வேறாய் முடிந்திருக்கின்றது. மேனாட்டார் கூடிய வரையில் தாங்களறிந்த ஒவ்வொன்றையும் அநுஷ்டானத்துக்குக் கொண்டு வருகின்றனர். அவர்கள் உதவி யின்றேல் நமது கோயில்கள் நிற்குமா, வேத புராண இதிகாச நூல்கள் பிழைக்குமா? பரவுமா? நீதி முறை நடுவு நிலைமையாய் நடக்குமா? கல்வி தான் இவ்வளவு கூட விருத்தியாக அநுகூலங்கள் ஏற்பட்டிருக்குமா?

இவைகளெல்லாம் இவ்வாறு மாறுபாடாக நடந்தேறி வருவதற்குக் காரணந்தான் என்னை? தெய்வத்தைப் பற்றிய பொய்ம்மை யுணர்ச்சியே. நமது நாட்டிலே பெரும்பான்மையோர் பலியிடுவதனாலும், உற்சவங்கள் நடத்தி வைப்பதனாலும், சோம்பேறிகட்குச் சோறூட்டுவதனாலும், கோயில்களுக்கென்று மட்டற்ற பணத்தைச் செலவு செய்வதனாலும் மறுமையில் நிலைபேறான முத்தியின்பத்தை யடையலாமென நம்பி யிருக்கின்றனர். மக்கள் உண்மை ஞானம் பெறுவதற்குக் கல்வியே அடிப்படையாகும். அக்கல்வியில் எவ்வளவு பணம் செலவழிந்தாலும் அது புண்ணியத்திற் சேரும். இக்காலத்தில் முக்கியமாய் நமது நாட்டில் கல்வித் தானத்தை விட வேறெந் தானமும் அவ்வளவு புண்ணியப் பயன் தராது. இக்கல்விப் புண்ணியத்தை எவன் செய்கின்றானோ அவனே ஞானியாவான், அவனே கடவுள் கட்டளையை நிறைவேற்றியவனாவான், அவனே மெய்யடியானாவான், அவனே கடவுளைக் கண்டு இம்மைக் கண்ணே இடையறா இன்பத்தைப் பெறுவான்.

எவன் தனக்கிட்ட விடத்தில் நின்று தன் கடமையைச் செவ்வனே செய்து முடிக்கின்றான்? எவன் அல்வழி யகற்றி நல்வழியிற் பொருள் தேடுகின்றான்? எவன் அப்பொருளை முதலில் தன் உற்றார் பெற்றார்கட்கும், பிறகு ஊரார் நாட்டாருக்கும், அதன் பிறகு பொதுவில் உலகத்தாருக்கும் ஈத்துவக்கின்றான்? எவன் தனக்கென வொன்றில்லாது எல்லாம் பிறர்க்கேயென எண்ணுகின்றான்? எவன் உலகத்தின்பொருட்டு உயிர்விடத் துணிந்திருக்கின்றான்? எவன் எல்லா மக்களையும் தன் மக்களென்றே தழுவுகின்றான்? எவன் எவ்வுயிரையும் தன்னுயிர்போல் மதிக்கின்றான்? எவன் தானே யுழந்து போசனம் புசிக்கின்றான்? எவன் மடியே மிடியென வெறுத்துத் தள்ளுகின்றான்? எவன் முயற்சியிற் கடைபோக நிற்கின்றான்? எவன் கோப வெறியைக் கொள்ளா தொழிக்கின்றான்? எவன் வைதவனை இன்சொல்லாற் கொள்கின்றான்? எவன் இறப்புக்கு அஞ்சாதிருக்கின்றான்? எவன் பிறர் நோய் கண்டழுகின்றான்? எவன் நம்பினோரைக் கைவிடாது காக்கின்றான்? எவன் உலகத்தில் ஞானம் பரவ வேண்டுமென்று உழைக்கின்றான்? எவன் பிறர்க்கு என்பும் உரியனாகின்றான்? எவன் மனத்துக்கண் மாசைப் போக்கி அறத்தின்கண் அமிழ்கின்றான்? எவன் அன்பே சிவமென்று எண்ணிப் போற்றுகின்றான்? அவனே தூய்மையான சைவமதத்தை அநுசரிக்கின்றவன். அவனே வேதசாத்திர இதிகாச புராணங்களை யறிந்தவன். அவனே நாற்பாற் குலத்தில் மேற்பாலொருவன். அவனே சிறந்த மகாசாரியன். அவனே அவத்தை யொழித்த தவசிரேஷ்டன். அவனே சாலோக சாமீப சாரூப சாயுச்சிய பதவிகளை யடைந்தவன். அவனே உண்மைத் தெய்வவுணர்ச்சி யுடையோன்.

கடவுள்

[R. M. அண்ணாமலை செட்டியார்]

இவ் வுலகத்திலே அறிவுடைய பொருள்களும் அறிவில்லாத பொருள்களும் நம் அநுபவத்திற் காணப்படுகின்றன. அறிவுடைப் பொருளென்றும் ஆன்மாவென்றும் பொருந்தும். அறிவிலாப் பொருளென்றும் சடமென்றும் பொருந்தும். இனி ஆன்மாக்கள் தாமே இயங்கக் கூடியனவாக அச் சடப்பொருள்கள் அறிவுடைப் பொருளியக்கிலன்றித் தாமாக இயங்க மாட்டாதனவாகவு மிருக்கின்றன. இவ்வுலகமோ நிலம், நீர், தீ, வளி, வெளி என்னும் ஐம்பெரும் பூதங்களாலாக்கப் பட்டிருக்கின்றது. அப்பூதங்கள் தாம் அறிவற்ற சடமாக இருந்தும் தோன்றவும் நிற்கவும் அழியவும் காண்கின்றோம். ஆனால் ஆன்மாக்களாகிய நாமெல்லோரும் அறிவுடைப் பொருளாக இருந்தாலும் அப்பூதங்களாலாக்கப்பட்ட உடலைக் கொண்டே அறிவு விளக்கம் பெறக் காண்டலாலும் அப்பூதங்களோ அறிவற்ற சடமாக இருந்தலால் தாமாக இயங்க மாட்டாமையாலும் பாரிசேட அளவையினாலே மற்றொரு பேரறிவுடைப் பொருளாலேதான் இவ்வுலகம் முத்தொழிற்படல் வேண்டுமென நன்கு நிரூபிக்கலாகும். அப்பேரறிவுடைப் பொருள்தான் கடவுள் என்று சொல்லப்படும்.

இனிக் கடவுள் என்ற சொல்லிற்கே கடந்து நிற்றலையுடையது என்பது பொருளாகும். எதைக் கடந்து நிற்றலையுடையதென்னின் தத்துவங்களைக் கடந்து நிற்றலையுடையது. நாம் எதையும் நம்மனம் வாக்குக் காயங்களைக் கொண்டே அறிகின்றோம். மனம் வாக்குக் காயங்களோ தத்துவங்கள். எனவே தத்துவங்களைக் கொண்டு தத்துவப் பொருளைக் காணக் கூடுமேயன்றித் தத்துவங்களைக் கடந்து நின்ற கடவுளைக் காண முடியாது. எனவே கண்ணுறக் காணப்படாமை கொண்டு கடவுளை இல்லையென்று சொல்லுதல் கூடாதென்க.

இனி நமது உடலையே எடுத்துக் கொள்வோம். கண் உடலைக் காணும். அந்தக் கரணம் கண்ணைக் காணும். உயிர் அந்தக் கரணத்தைக் காணும். கடவுள் உயிரைக் காணும். உயிர் கடவுளைக் காணாது. அந்தக் கரணம் உயிரைக் காணாது. கண் அந்தக் கரணத்தைக் காணாது. உடல் கண்ணைக் காணாது. இதை மற்றொரு விதமாகச் சொல்வதனால் கடவுள் உயிரையும் அந்தக் கரணத்தையும் கண்ணையும் உடலையும் காண்பார். உயிர் அந்தக் கரணத்தையும் கண்ணையும் உடலையும் காணும். கண் உடலை மாத்திரம் காணும். உடல், கண்ணையும், அந்தக்கரணத்தையும் உயிரையும் கடவுளையும் காண மாட்டாது. கண் அந்தக் கரணத்தையும் உயிரையும் கடவுளையும் காணமாட்டாது. அந்தக் கரணம் உயிரையும் கடவுளையும் காண மாட்டாது. உயிர் கடவுளைக் காண மாட்டாது. எனவே உடலாற் காணப்படாமை கொண்டு கண் இல்பொருளாகாது. அந்தக் கரணத்தாற் காணப்படாமை கொண்டு உயிர் இல்பொருளாகாது. உயிராற் காணப்படாமை கொண்டு கடவுள் இல்பொருளாகாது. எனவே கருவி கரணங்களாற் காணப்படாமை கொண்டு

கடவுளை இல்லையென்று சொல்லுதல் கூடாதென்பது சாதிக்கப்பட்டது.

இனி, நம்மால் வழங்கப் பெறும் சொற்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பொருளைக் குறித்தாக இருப்பதாகவே நம் அநுபவத்திற் காணப் படுவதால் கடவுள் என்ற சொல்லைக் கொண்டே அச்சொல்லிற் குரிய பொருள் ஒன்று உண்டென்று கொள்வோம்.

இனி ஒரு மணி காட்டியை எடுத்துக் கொள்வோம். அதில் அமைக்கப்பட்டிருக்கும் சக்கரங்கள் முதலியவற்றை யெல்லாம் உற்று நோக்கும்போதும் அவை தமது வேலையைச் சரிவரச் செய்துகொண்டு வருவதை நினைக்கும் போதும் இஃதோர் புத்திமானால் செய்யப்பட்டிருத்தல் வேண்டுமென்று உணரக்கிடத்தல் போல இவ்வுலகத்தில் இங்கே காணப்படும் சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள், கடல், மலை முதலியவற்றை யெல்லாம் உற்று நோக்கும் போதும் அவை தமது வேலையைச் சரிவரச் செய்துகொண்டு வருவதை நினைக்கும்போதும் இதுவும் ஒரு புத்திமானால் செய்யப்பட்டிருத்தல் வேண்டுமென்று உணரக் கிடக்கின்றது. ஆதலால் கடவுள் ஒருவர் உண்டென்பதே பெறப்படுகின்றது.

இனி, கடவுளை உண்டென்பார் பலராகவும் இல்லை யென்பார் சிலராகவுமிருத்தலினாலே பெரும்பான்மையே பிரமாணம் என்னும் வழக்குண்மையாலே இதனாலும் கடவுள் ஒருவர் உண்டென்றே தெரிகின்றது. இன்னும் நிலம், நீர், தீ, வளி, வெளி என்று சொல்லப்பட்ட பூதங்கள் ஐந்தனுள் காற்றென்று சொல்லப்படும் வளியானது பரிச வுணர்ச்சிக்கு மாத்திரம் புலனாகின்றதே யன்றிக் கண்ணுக்குப் புலனாவதில்லையே. அவ்வாறிருந்தும் காற்றையில்லை யென்பா ரொருவரு மில்லை. எனவே கண்ணாற் காணப்படாத சடப் பொருளாகிய காற்றைக் கூட உண்டென்று ஒப்புக் கொள்கின்ற நாம் கண்ணாற் காணப்படாமை கொண்டு அறிவுடைப் பொருளாகிய கடவுளை இல்லை யென்று சொல்லுதல் தகுமோ சொல்லுமின்!

இனிக் கடவுளில்லை யென்று வாதிக்கும் நாத்திகர்களுங் கூடத் தாங்கள் பசி, பிணி முதலியவற்றுற் றுன்புறுங் காலங்களில் தங்கள் நாத்திக வாதத்தை யெல்லாம் மறந்து கடவுளையே நாடுகின்றார்கள். இதனாலே கடவுள் ஒருவர் உண்டென்பது குறிப்பா லுணரக் கிடக்கின்றது.

இனிச் சிலர் இவ்வுலகமானது மேற் கூறியபடி முத்தொழிற் படல் உண்மையேயாயினும் அவ்விதத் தோற்றக் கேடுகள் அதற்கு இயற்கையேயென்றும் அதற்காக ஒரு கடவுள் வேண்டப் படுவா ரல்ல ரென்றும் கூறுநிற்பர். அவரது கொள்கையை யாராய்வோமாயின் தோன்றலும் கெடுதலும் விகாரமாதலின் அவ்விதம் விகாரமாதல் இயல்பினுக்குக் கூடாது. அல்லது அவ்வித விகாரமே அதற்கு இயல்பென்பாராயின் அவ்வித காரியம் விகாரமெனப் படுமே யல்லாது இயல்பென்பது இல்லாது போய்விடும். அன்றியும் அவ் விகாரமானது செய்வினை யாதலால் அவ்விதச் செய்வினையும் செயல் செய்வானொருவனை யின்றி யமையாதென்க. உதாரணமாகக் குடம் முதலிய பொருள்கள் தாமே மண்ணினின்றும் தோன்றுமல் குயவனது காரிய விசேடத்தால் தோன்றுவது யாவர்க்கும் பிரத்யட்சமாதல் போல இவ்வுலகத்தையும் இதன் காரணத் தினின்றுங் காரியப்படுத்துவதற்குக் கடவுள் ஒருவர் வேண்டப் படுவா ரென்பதே தேற்றமாம். இது காறும் கடவுள் உண்மைக்குப் பிரமாணம் ஒரு சிறிது காட்டப்பட்டது.

18724

சற்காரிய வாதம்

[(வேள்) M. துரைக்கண்ணன்]

“உள்ளது போகாது, இல்லது வாராது” என்னும் உண்மையை யுணர்த்துவதே சற்காரியவாதம் எனப்படும். இதனை விரிவாக ஆராயுமிடத்து, உலகமும், உலகத்திலுள்ள பொருள்களும் எக்காலத்தும் அழிதன் மாலையனவல்ல வென்பதே முடிந்த பொருளாம்.

உலகம் நித்தமாயின் தோற்றம், காப்பு, அழிப்பு என்னும் மூவினையுடைத் தென்றல் யாங்ஙனம் பொருந்தும் எனின், அற்றன்று; ஒருவனென்றும், ஒருத்தியென்றும், ஒன்றென்றும் இவ்வாறு அவயவப் பகுப்புடைத்தாயும், பலவேறுவகைத்தாய்ச் சடமாயுஞ், சுட்டியறியப் படுவதாயு மிருத்தலின் இம்மூன்றேதுவானும் உலகம் தோன்றி நின்றழியு மென்பது துணியப்படும். தோற்றமும் ஈறும் உள்ளதன்பாலே உண்டாவதா மாதலி னென்க.

உலகம் உள்ளதாயின் உள்ளதற்கு உண்டாக வேண்டுவ தில்லை யாகலாற் சற்காரிய வாதம் அடாது எனின், உள்ளதாயினுஞ் சங்கார காலத்தி னொடுங்கிய தாகலான், அவ்வொடுங்கிய உலகம் தானொடுங்குதற்கு நிலைக்களனான சங்கார கருத்தாவினின்றும் படைப்புக் காலத்தின் மீள வுளதாம். அற்றேல் ஒடுங்கியது ஒடுங்கியவாறே யொழியாது மீளவுண்டாக வேண்டா வேண்டுமாயின் முன்னொடுங்காது நிலைபெறவே யமையும்; அவ்வாறன்றி ஒடுங்கி மீளவுளதாவது எற்றுக்கெனின்; உள்ளதாகிய உலகம் கருமமலம் பரிபாகமாதற்பொருட்டு ஒடுங்கி, ஆணவ மலம் பரிபாக மாதற்பொருட்டு மீளவுமுண்டாம். அற்றேல் முன்னின்ற உலகம் நாசமாக, வேறு தோன்றுமென்னாமல் அதுவே ஒடுங்கி நின்று மீளவுளதாமென்றற்குப் பிரமாணம் என்னையெனின், எஃதெவ்வாறு நின்றொடுங்கிற்று அஃதவ்வொடுங்கிய வாறே உளதாதல் எல்லாராலும் விரும்பப்படும். எனவே, அந்நியம மில்லையாயின் நெற்கமுகாய் நீளாது நெல்லாய் நீளுதற்கு ஏது வென்னை யென்னுந் தருக்கமே அதனை யறிவுறுத்தும்.

இனி, சற்காரிய வாதத்தின் அவ்வக் காரியங்கள் தத்த முதற்காரணத் தொடுங்குமெனவே கோடலில், உலகிற்கு முதற்காரணமாகிய மூலப்பகுதி (மாயை) சங்கார கருத்தாவின் மாட்டொடுங்கும்.

“இலயித்த தன்னிலில யித்ததாம லத்தா
லிலயித்த வாறுளதா வேண்டும்–இலயித்த
தத்திதியி லென்னி னழியா தவையழிவ
தத்திதியு மாதியுமா மங்கு”

எனச் சற்காரியவாதங் கூறவே இலயித்த வவத்தையின் அவ்வக்காரிய சத்தி சமூகமாய்ச் சூக்குமமாய் நிற்பது முதற்காரணமாகிய மாயை யென்பது பெறப்பட்டது.

நிமித்த காரணனாகிய முதல்வன் உலகிற்கு முதற் காரண னல்லனாயினும், முதற்காரணமாகிய மாயைக்கு ஆதாரமாய் நிற்றலின், உலகம் ஆண்டொடுங்கி ஆண்டு நின்று தோன்றுதல் அமையும்.

மாயையும் உலகமும் வித்தும் அங்குரமும் போலுமாகலின், வித்துக்கு ஆதாரமாகிய நிலங்குளிர்ந்த வழி அதன்கண் வித்துள்ளதாக, அதனினின்றும் அங்குரந் தோன்றியவாறு போல, மாயை தனக்காதாரமாய் நின்று தோற்றுவிக்கும் இறைவனது சத்தியின் கணுள்ளதாய் நிற்றலால், அச்சத்தி சங்கற்பித்தவழி அவரவர் வினைக்கீடாக அவ்வக்காரியங்களை அவ்வவ்வியல்பிற் பிறழாமற் பயக்குஞ் சதுரப்பாடுடைத்தாம். அல்லுழி உடைத் தன்று. நிலங் குளிர்ந்த வழி அதன்கட் கிடந்தன்றி வித்து முளையைத் தோற்றுதவாறு போலும். ஆகலான் மாயையினொடுங்கித் தோன்றிய உலகம் அதற்காதாரமாய் நின்ற இறைவன் சத்தியினொடுங்கித் தோன்றியதேயாம். இது கிழங்கினின்றுந் தோன்றிய தாமரையைப் பங்கயமென்பதனானு மறிக.

யாது யாண்டொடுங்கும் அஃததனினுற்பத்தியாம். மண்ணிற் குடம் போலும் என்னும் அவினாபாவத்தால் உலகம் சங்கார காரணன் மாட்டொடுங்குதலின் மீளத் தோன்றுங்கால் ஆண்டு நின்றுந் தோன்றுதலே பொருத்தமுடைமையின் அவ்வாறு மேற்கொண்டது. ஆகலால் உள்பொருளெனப்பட்ட உலகம் தத்த முதற் காரணத்தினின்றுந் தானே தோன்றி யழியும். அவ்வுலகம் தானொடுங்குதற்கு நிலைக்களமான சங்கார கருத்தாவினின்றன்றி உளதாகாது.

வழி நூலாசிரியர், “உயிரவையொடுங்கிப் பின்னு முதிப்பதெனவன்பால்” என்றும், “உலகவனுருவிற் றோன்றி யொடுங்கிடும்” என்றும் ஓதியதூஉம் இவ்வியல்பு நோக்கி யென்க.

இவ்வாறு ஒன்றொன்றிற் றோன்றியுளதா யிறுதலாவதை, “பயில்வித்தெல்லாங் காரிட மதனிற் காட்டு மங்குரங் சழியும் வேனில்” என்னுஞ் சிவஞான சித்தியா லறிக.

செய்துஞ் செய்வித்தும் எல்லாத் தொழிற்கும் வினை முதலாய் நிற்கு முதற் கடவுள் சங்கார கருத்தா வொருவனே.

ஈண்டுச் சங்கார காரணன் என்றது ஐவகைச் சங்காரத்துள் இறுதிக் கண்ணதாகிய சாந்தியதீத கலையிலடங்கிய தத்துவ புவனங்களாகிய சுத்த மாயா புவனாந்தஞ் சங்கரிக்குஞ் சங்கார காரணனாகிய பரமசிவனையே யன்றி அயன்மாலொடுங் கூடக் குணத்தத்துவத்தின் வைகிப் பிரகிருதி புவனாந்தஞ் சங்கரிக்கும் குணிருத்திரனை யன்றென உணர்க. இவ் வேறுபாடுணர்த்தற் கன்றே பொதுப்படச் சங்காரகாரணனை யென்றொழியாது சங்கார காரணனாயுள்ள முதலையே என விதந்தோதியதூஉமென்க.

தோற்றக் கேடுகளுண்மை காட்சி முதலிய அளவைகளான் அறிய வாராமையில் உலகம் நித்தப்பொருளேயாம். இவற்ற துண்மையை உலகுய்யத் தெரித்தற் கன்றே, மூன்று ஆண்டே நிரம்பப் பெற்ற பசுங் குழவியாய சுவேதவனப் பெருமான் தீஞ்சுவை ததும்பும் பானல் வாய் மலர்ந்து,

“அவனவ ளதுவெனுமவை மூவினைமையிற்
றோற்றிய திதியே யொடுங்கி மலத்துளதா
மந்தமாதி யென்மனார் புலவர்”

என்று அருளினார். இதற்கு உரை எழுதப் புகுந்த திராவிட மகா பாடிய கருத்தாவாகிய மாதவச் சிவஞான யோகிகள், “ஆண் பெண் அலி என்

முற்போலும் உலகத்தொகுதி, தோற்றம் நிலை இறுதி என்னும் முத்தொழிலுடைமையான், ஒருவனாற் றோற்றப்பட்டு நின்று உள்ளதேயாம். அற்றேல், அஃது யாவனினுளதா மெனின், தானொடுங்குதற்கு நிலைக்களமான கடவுளினின்றும் உளதாம். ஒடுங்கியவாறே ஒழியாது மீளவுளதாவது எதனாலெனில், சகசமான ஆணவமலந் தீர்ந்தொடுங்காமையான் உளதாம். இங்ஙனமாகலின், சங்காரத் தொழிலைச் செய்யுங் கடவுளே முதற் கடவுளென்று கூறுவர் அறிவுடையோர்" என்று விரித்தோதினர்.

இனி, எம்மருந் தெய்வமாகிய மெய்கண்டாரைப் பின்பற்றிய மற்றிரு சந்தான குரவரும், " உதிப்பது மீறுமுண்டென்றுரைப்பதிங் கென்னை முன்னோர், மதித்துலக நாதியாக மன்னியதென்பரென்னி, விதற்கியானனுமாறுதியெடேனிப் பூதாதியெல்லாம், விதிப்படி தோற்றி மாயக் காணலான் மேதினிக்கே" என்றும்,

" உலகமெலா மொருவனோ
டொருத்தி யென்றென்
றுளதாகி நின்றளவி
லொடுங்கும் பின்னு
மலமதனா லுளதாகு
முருவ மாறி
வருவதுவு போவதுவு
செல்வ தாதலானு
மலவில சேதன
மாயை யாதலானு
மனுக்க ளுருவடையு
மறிவிலாமை யானு
நிலவு தொழின்
மருவியரு நிற்றலானு
நின்றவையு மளித்திடுவ
னிமலன் றானே "

என்றும்,

" உள்ளது போகா தில்லது வாரா
துள்ளதே யுள்ளதெனு முறையதனால் "

என்றும் அருளிய அருள் வாக்குகளே வலியுறுத்தும்.

இதன்றியும்,

" விச்சதின்றியே விளைவு
செய்குவாய் விண்ணுமு
மண்ணகம் முழுதும்
யாவையும்
வைச்சு வாங்குவாய் "

என்னும் மணிவாசகப் பெருந்தகையருளிய மணிவாசகமும்,

" விச்சின்றி நாறு செய்வானும் "

என்னும் தாண்டகச் சதுரராகிய திருநாவுக்கரையப் பெருமானின் திருவாக்கும் இச் சற்காரியவாதத்தை யுணர்த்துவதற்கே எழுந்தனவா மென்க.

இதனால் கடவுளே யன்றி உயிர்களும், ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களும், மாயையின் காரியமாகிய உலகங்களும் அவ்வவ் வுலகங்களிலுள்ள பொருள்களும் என்றும் நித்தமாயுள்ள உள்பொருள்களே யாமன்றி, அழியும்பொருள்க ளல்ல. உயிர்களும், மும்மலங்களும் இறைவன்போல் நித்தமென்பதை,

" என்று நீ அன்று நான் "

என்றும்,

" சுடரொளியா லென்று முள
னென்றளவுமியாவு முளனெகி "

என்றும்,

" எற்றுஞான் றனை யுளமற்றான் றியாரும் "

என்றும்,

" பதிபசுபாச மெனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற்பசுபாச மனாதி
பதியினைச் சென்றணுகாப் பசுபாசம்
பதியணுகிற் பசுபாச நிலாவே "

என்றும்,

" நெல்லிற் குமியுநிகழ்
செம்பினிற் களிம்புஞ்
சொல்லிற் புதிதன்று
தொன்மையே—வல்லி
மலகன்மமன் றுளவாம்
வள்ளலாற் பொன்வா
ளலர்சோகஞ் செய்க
மலத்தாம் "

என்றும் வரும் திருவாக்குக்களானும் உணர்க.

அற்றேல், கடவுள், உயிர்கள், மும்மலம் ஆகிய முப்பொருளும் நித்தமென்றல் உண்மையே. உலகமும், உலகப் பொருள்களும் நித்த மென்றல் யாங்ஙனம் ? உலகப்பொருள்களின் அழிவை யாம் தினமுங் காண்கின்றனமே ! ஊழிக்காலத்து உலகமும் அழிகின்றதென்று சான்றோர்களும் நூல்களும் அறைகின்றனவே. ஆதலால் நீர் கூறும் சற்காரிய வாதம் அடாது எனின்; நன்று கடாயினாய் ! உலகமும், அதிலுள்ள பொருள்களும் முதற்காரணமாகிய மாயையினின்றும் உண்டாவனவாம். இப்பொருள்க ளெல்லாம் அழிவனவாக நம் புலனுக்குத் தோற்றுவதெல்லாம் அம்மாயையினின் விகாரமேயாம். இவையெல்லாம் தங்கட்கு நிலைக்களனாகவுள்ள மாயையில் ஒடுங்கி மீளவுளதாவ தன்றி முற்றும் அழிந்து ஒழிவதில்லை. காரணம்போல் காரியமும் நித்தியமே யாகலான் முதற்காரணமாகிய மாயை நித்தமாதல் போல் அதனால் காரியப்படும் உலகமும், அதிலுள்ள பொருள்களும் நித்தமே யெனவறிக. இதனால் யாம் கொண்ட சற்காரிய வாதத்திற்கு உண்டாம் இழுக்கு யாது மில்லையென வொழிக.

அஃதல்லாமலும், உலகம் அநாதியென்பதற்கு,

" அநாதிவைய மற்றொரு கடவுளித்தைத்
தருதலா லாதியாகச் சாற்றலு மாகும் "

என்னும் அருள் வாக்கே சான்று பகரும்.

இங்ஙனமன்றியும், மாயையே முதற்காரணமாக நின்று நிமித்த காரணனாகிய கடவுளாணையால் உலகைத் தன்னினின்றும் விரியச்செய்து நடத்துகின்றதென்பதை,

" நித்தமாயருவாயேக நிலையதா
யகிலத்துக்கோர்
வித்துமாய சித்தா யெங்கும்
வியாபியாய் விமலனுக் கோர்
சத்தியாய்ப் புவன போகந்
தனுகரணமு முயிர்க்காய்
வைத்ததோர் மலமாய் மாயை
மயக்க முஞ்செய்யு மன்றே "

" மாயையிற் காலமொடு நியதி
பின்கலாதி தோன்று
மாயவக் காலமூன்று யாக்கியு
மளித்தும் போக்கிக்
காயமோ டுலகுக் கெல்லாங்
காலசங்கை யினைப்பண்ணி
நாயக னாணையாலே நடத்திடுஞ்
சகத்தை யெல்லாம் "

" நியதி பின்னேன்றிக் கன்ம
நிச்சயம் பண்ணி நிற்கு
மயர்விலாக் கலைபின் றோன்றி
யாணவ மொதுக்கிச் சித்தின்
செயல்புரி கிரியா சத்தி
தெரிவிக்குஞ் சிறிதே வித்தை
யுயர்கலை யதனிற் றோன்றியறி
வினையு திக்கப் பண்ணும் "

என்று அருணந்தி சிவாசாரிய சுவா[மி]கள் அருளி யமையானும் அறியலாம்.

உளதாகிய உலகத்தை முத்தொழில்படுத்தற்கு இறைவன் தான் நிமித்தகாரணனா யிருந்து அருட்சத்தியைத் துணைக் காரணமாகவும், மாயையை

முதற்காரணமாகவும் நிலைபெறச் செய்கிறான். இவ்விதம் இறைவன் உலகத்தைத் தொழிற்படுத்துவதை யுணர்த்தற் கன்றே,

“ காரியகாரணங்கண்முதறுணை
நிமித்தங் கண்டாம்
பாரின்மண்டி ரிகைபண்ணு
மவன்முதறுணை நிமித்தந்
தேரின்மண் மாயையாகத்
திரிகைதன் சத்தியாக
வாரியன் குலாலனாய்
நின்ருக்குவனகிலமெல்லாம் ”

என்று அருணந்தி சிவாசாரிய சுவாமிகள் அருளிச் செய்ததூஉம் என்க.

இவ்விதம் என்று முள்ளதாகிய உலகத்தை மூவினைப்படுத்து நடப்பித்தற்குக் காரண மென்னையெனின், முன்னவன் விளையாட்டென்று மொழிதலொன்று, உயிர்களுக்கு மன்னிய புத்தி முத்தி வழங்கவும், அருளான் முன்னே துன்னிய மலங்களெல்லாந் துடைப்பதும் என்பது பிறிதொன்று இதுவேயுமன்றி, இறைவனின் இச்செய்கையெல்லாம் நுனித்த மதிகொண்டு நோக்கில் உயிர்களின்மேல் வைத்த கருணையேயாம் என்பது தெளிப்படும். இதனை யுள்ளவா றுணர்ந்த அருணந்தி சிவாசாரியரும்,

“ அழிப்பிளைப் பாற்றலாக்கமல்
வவர்கன்ம மெல்லாங்
கழிந்திட அகாரச்செய்கை
காப்பது கன்மவொப்பிற்
றெழித்திட மலங்களெல்லா
மறைப்பருள் செய்திதாலும்
பழிப்பொழிபந்தம் வீடுபொர்த்திடி
லருளேயெல்லாம் ”

என்று விளக்கிப் போந்தார்.

இவ்வாறு சங்காரத்தி ஞெடுங்கிய உலகம் மீள வுளதாதற் பொருட்டு முதல்வன் தன்னுள் ஒடுங்கிய அருட்சத்தியை மீளத் தோற்றுவித்து, அதனினின்றும் மாயையைத் தோற்றுவித்து உயிர்களை விடாதுபற்றிக் கொண்டிருக்கிற ஆணவமலம் பரிபாக மாதற் பொருட்டு அதனைக் காரியப்படுத்தி உலகங்களையும், உலகப் பொருள்களையும் உளதாக்கி நிலைபெற செய்தலும், உயிர்களின் கருமமலம் பரிபாகமாதற் பொருட்டு அண்டத் தொகுதிகளெல்லாம் அணுவாகிக் காரண மாயையிலொடுங்க, அம்மாயை சிற்சத்தியிலொடுங்க, சிற்சத்தி சிவத்திலொடுங்க, இவ்வாறுதன்னுள் யாவற்றையும் ஒடுக்கி இறுதிக் காலத்து தான் ஒருவனாய் நிற்றலுமே யன்றி, இப்பொருள் உளதாதலும், உள்பொருள் இலதாதலும் யாண்டும் இல்லை யென்க.

இனி, முதல்வனையும் உயிர்களையும் போல் சடப்பொருளாகிய மும்மலமும் நித்தமாய் அழியாது உளதெனின், ஆணவ மலத்தால் கவ்வப்பட்ட ஓர் உயிர் திருவருளால் செலுத்தப் பெற்றுச் சத்திநிபாதம் உற்று இறைவன் திருவடியை யடைந்த காலத்து அவ்வுயிரினை விடாது பற்றிக் கட்டுப் படுத்திக் கொண்டிருந்த மும்மலமும் அழிந்து ஒழியா திருக்கு மன்றே! அவ்வாறிருப்பின் இறைவனடியை யடைந்த உயிர் மும்மல நீக்கம் பெறுமா றெவ்விதம்? ஒருகாலு மில்லை யாதலின் அவ்விடத்தில் மும்மலமும் அழிந்து மாய்தல் ஒருதலை யாதலால் நீ கூறும் சற்காரிய வாதம் பொருந்தாதெனின், நன்று கடாயினாய்? மும்மலங்களினால் பிணிப்புண்டு கிடந்த உயிர் கடவுள் திருவடியை யடைந்த காலத்தும், அவ்வுயிரினைக் கட்டுப்படுத்திக்கொண் டிருக்கும் மும்மலங்கள் அழிந்து ஒழிந்து போகவில்லை. ஆயின் அவைகளின் ஆற்றல் ஆண்டவன் திருமுன் பயனிலதாய் ஒழிந்து தன் சத்தி குறைந்துபோதலேயன்றி, அந்நிலையில் உயிர் இன்பமடைதற்கு ஏதுவாயு மிருந்து உதவி புரிகின்றன. இதனை உள்ளவாறு உணர்த்தற் கன்றே,

“ வாக்குமன மிறந்தவான்
கருணை யாளனொரு
தாக்களவே நிற்குந்
தனிமுதல்வா—நீக்காப்
பதியினைப் போனித்தம்
பசுபாச மென்றாய்
கதியிடத்து மூன்றினையுங்
காட்டு. ”

என்றும்,

“ முத்திதனில் மூன்று
முதலு மொழியக்கேள்
சுத்தவனு போகத்தைத்
துய்த்தலணு—மெத்தவே
யின்பங் கொடுத்தலிறை
யித்தைவிளை வித்தல்மல
மன்புடனே கண்டு
கொள்ளப் பா ”

என்றும் வினுவிடை முகத்தான் விளக்கியருளினர் சைவசிகாமணியாகிய திருவதிகை மனவாசகங் கடந்தார்.

இதன்றியும்,

“ ஒன்றலா வொன்று
வுளதாகி நின்றவா
ஞென்றலா வொன்றிலவை
யீறு—ளொன்றலா
வீறே முதலதனி
லீறிலா வொன்றுபல
வாறே தொழும்
பாகு மங்கு. ”

என்றும்,

“ நசித்தொன்றி னுள்ள
நசித்தலா லொன்று
நசித்திலதே லொன்
றுவதில்லை—நசித்துமல
மப்பணைந்த வுப்பினுள
மணைந்து சேடமாங்
கப்பின்று மீசன்
கழல். ”

என்றும்,

“ பொன்வான் முன்கொண்
மூவிற்புக்கொடுங் கிப்போயகலத்
தன்வாளே யெங்குமாந்
தன்மைபோன்—முன்வான்
மலத்தின் மறைந்துள்ள
மற்றுவகை யுண்ணு
மலத்திரித்துச் செல்லும்
வாத்து. ”

என்றும்,

“ நெல்லினுக்குத் தவிடுமிக
ளனுதி யாயு
நெல்லை விட்டு நீங்கியவை
நின்றநிலை நிகழ்த்தீர்
சொல்லியிடிற்று களற்ற
வரிசியின் பாலில்லைத்
தொக்கி ருந்து மற்றொரு
நெற்றொற் றிடாவா
மெல்ல வினை விடுமறவே
யவை போல வணுவை
மேவு மலமுடல் கன்ம
மனுதி விட்டே நீங்கு
நல்லசிவ முத்தியின்கட்
பெத்தான் மாவை
நணுகி நிற்குமாதலி
ஞைசமு மின்றாமே. ”

என்றும்,

“ அழிந்திடும் பாசமென்னி
னித்துமென் றுரைத்தல்வேண்டா
வழிந்திடா தென்னின்
ஞான மடைவது கருதவேண்டா
வழிந்திடுஞ் சத்தி நித்த
மழிந்திடா வொளியின் முன்ன
ரழிந்திடு மிருளு நாச
மடைந்திடா மிடைந்திடாவே ”

என்றும் சித்தாந்த நூன் முடிவு தேறிய சந்தான குரவர்கள் அருளிய திருவாக்குகளாலும் முத்தியினும் மும்மலமுண்டென்பதை யறிந்து கொள்க.

இனி, முழுமுதற் கடவுளை யடைவதற்குச் சோபான முறையாக வைக்கப்படும் நெறிகள் பலவற்றுள்ளும் இச்சற்காரிய வாதத்தை யுணர்த்தும் நெறியொன்றேனு மில்லை. இந்நெறிகளுக்கெல்லாம் தலைமை பெற்றதாய், அவைகளில் கூறப்பட்ட உண்மைகளை யெல்லாம் தன்னுள் வாய்க்கப்பெற்று, அவற்றுள் அடங்காத பல விழுமிய பொருள்களைத் தன்னுள் நிரம்பப் பெற்று அவைகளினும் மிக்கு விளங்குவதால், சமயம் என்னும் பெயரைத் தனக்குச் சிறப்புப் பெயராய்க் கொண்டு திகழ்வதாயுள்ள சைவ சமய மொன்றே சற்காரிய வாதத்தை யுணர்த்தி நிற்கின்றது. ஆகலினாலன்றே சைவம் சற்காரிய வாதமென வழைக்கப்பட்டது.

இச்சற்காரிய வாதத்தி னுண்மையை மேனாட்டுப் புலமை மிக்க அறிஞர்கள் தங்கள் நுண்ணிய ஆராய்ச்சியால் கண்டறிந்து தெளிந்து பண்டைத் தமிழ் முதுமக்களின் தெய்விக உணர்ச்சியையும், இயற்கைப் பொருணுட்பங்களைத் தெளிந்து அவைகளில் இறைவனின் பூவின் நாற்றம் போன்றுயர்ந்தெங்கும் ஒழிவற நிறைந்த வியாபகத் தன்மையினைக் கண்டு வழிபட்ட நிலையினையும், கல்வியறிவின் மேம்பாட்டையும் நாகரிக வளர்ச்சியை வியந்து போற்றுகின்றனர்.

என்றிதுகாறும் கூறியவாற்றால் உலகமும், உலகப் பொருள்களும் பதிபசு பாசம் போன்று நித்தமேயா மென்பதும் நித்தமாகிய உலகம் உயிர்களுக்குச் சகல மலம் பரிபாகமாதற் பொருட்டுத் தோன்றியும், கரும மலம் பரிபாகமாதற் பொருட்டுத் தான் ஒடுங்கி முத்தொழிற் படுகின்ற தென்பதும், மூவினை யுடைமையாலேயே உலகம் நித்தமென்பது பெறப்படும் என்பதும், மாயை உலகைக் காரியப் படுத்தற்கு முதற் காரணமா யிருப்பினும், அம்மாயை சிற் சத்தியிலொடுங்கி, அது வலிய வழி உலகத்தைக் காரியப்படுத்துகின்றமையின், அவ்வாறு மாயையைச் சங்கற்பிக்கும் சிற் சத்தியையும் தன் இச்சை வண்ணம் நடத்தும் முதல்வன் ஒருவனுளன், அவனே சங்கார காரணனாகிய பரமசிவன் என்பதும், நில முதலியவை தத்தங் காரணங்களுளொடுங்கி யாவும் மாயையி லொடுங்க, அம்மாயை சிற்சத்தியி லொடுங்க, சிற்சத்தி சிவத்தி லொடுங்குதலே யன்றி எப்பொருளும் சூன்ய மாத லில்லை யென்பதும், இவ்வுண்மைகளை உணர்த்துதற்கே சித்தாந்த சாத்திரங்கள் எழுந்தன வென்பதும், உண்மையில் சுத்தாத்துவித முற்ற காலத்து இன்பத்தினை யீவானும், இன்பத்தினை யேற்பானும், இன்பத்தினை விளைவிப்பதற்கேதுவும் ஆகிய மூன்று பொருளுமுண்டென்பதும், பரம் பொருள் போல் அழிவின்றி நித்தமாய்ச் சேதனப் பிரபஞ்சம் வீடுபேற்றின்கண்ணும் பலவாற்றானும் பரம் பொருளுக்கு அடிமையா மென்பதூஉம், "அன்றே யநாதி யமைந்தபடி யல்லாதொன்றின்றே புதிதா யிசையுமோ" என்னும் இச் சற்காரிய வாதத்தைச் சைவ சமய மொன்றே யுணர்த்துகின்ற தென்பதூஉம், மேலைத் திசைப் புலமை மிக்க பெருமக்களும் தங்கள் நுண்ணிய ஆராய்ச்சியால் இவ் வுண்மையைத் தெளிந்து போற்றுகின்றார்களென்பதூஉம் அறிந்தோம் என்பது. சிவம்.

அறிக்கை

அன்பர்களில் அநேகர் இன்னும் தங்கள் சந்தாத் தொகையைச் செலுத்தாது இருக்கின்றனர். அன்னோர் இதனைக் கண்ணுற்றவுடனே தயவுசெய்து தாமத மின்றி அனுப்புவார்களாக.

சிவமணிகள்

[சுவாமி ராமசுவாமி திரட்டியது]

சிவ நாமங்களை ஸ்மரிப்பவர்கட்கு உண்மையில் சுகமே விளையும்.

* * *

தத்துவ ஞான மடைந்தா லன்றி அஞ்ஞானம் அழிய மாட்டாது.

* * *

மாநுடருக்குப் பலவிதத் துக்கங்களும் அஞ்ஞானத்தாலேயே தோன்றுகின்றன.

* * *

ஞானத்தைக் காட்டிலும் பரிசுத்தமானதும் பரிசுத்த மாக்குவதும் பிறிதொன்று மில்லை.

* * *

அஞ்ஞானமுள்ள வரையில் இராகத்துவேஷாதிகளால் தர்மா தர்மங்கள் உண்டாகின்றன.

* * *

சத்தியத்தினாலேயே சரா சரப் பிரமாண்டம் முழுவதும் விளங்குகின்றது.

* * *

பிரபஞ்ச வாசிகள் யாவரும் மாயா சகிதராதலின் சிவபெருமானை ஒருவரும் அறிகிலர்.

* * *

சுயேச்சையால் எல்லாக் காரியங்கட்கும் கர்த்தாவாக விளங்குபவர் ஒருவரே.

* * *

போர் செய்தலும் நட்பாடலும் சமமானவர்களுட னன்றி அசமான மானவருடன் செய்த லாகாது.

* * *

சிவ சேவை செய்துகொண்டிருக்கையிலேயே கஷ்டம் வருமாயின் கர்மத்தால் வந்ததெனக் கொள்ள வேண்டும்.

* * *

அசத்திய வார்த்தைகள் கூறினோர் தாம் அதுகாறுஞ் செய்த புண்ணியங்களை இழந்து போவார்கள்.

* * *

பொய் பேசுகிறவன் பூர்வத்திற் செய்த புண்ணியம் முழுவதையும் க்ஷண காலத்தில் நாசப்படுத்துகிறான்.

* * *

சிவபெருமான் சத்தி சம்பந்தமாகவே நின்று எல்லாக் காரியங்களையும் நடத்துகிறார் என்று உணர வேண்டும்.

* * *

சிவமுஞ் சத்தியும், பூவும் மணமும், மணியும் ஒளியும், தீயும் சூடும் தண்ணீரும் குளிர்ச்சியும் போல அபேத நீங்க விளங்குகிறார்கள்.

* * *

பரமாத்மாவாகிய சிவபெருமானிடத்திற் சித்தத்தைச் செலுத்தி நிற்பதே ஞான யோகம்.

* * *

எப்பொழுது ஒருவர் மனத்தில் துக்கமுண்டாகிறதோ அப்பொழுது சிவபெருமானைப் பூசித்தால் அந்தத் துக்கம் ஒழிந்து போகும்.

* * *

சுகத்தை யடைய விருப்பமுள்ளோன் அவனது சர்வ இஷ்டங்களும் கூடி வருவதற்காக அநாதியான சிவரூபத்தைச் சிறந்த பக்தியோடு பூஜிக்க வேண்டும்.

* * *

சிவபெருமானிடத்தில் உண்மையான பக்தி கொண்டிருந்தால் எவ்வகைக் கஷ்டங்கள் வந்தாலும் அவை யாவும் சூரியன் முன் பனி போல் நீங்கிவிடும்.

சிவபக்தி செய்து கொண்டு விஷ்ணு தூஷணமும், விஷ்ணுபக்தி செய்து கொண்டு சிவ தூஷணமுஞ் செய்வோர் நரகத்தை அடைவார்கள்.

***

எங்கும் வியாபகமாயுள்ள சிவ பெருமானே எல்லாப் பிராணிகளிலும் வியாபித்து சேதனு சேதனங்கள் யாவுந் தாமே யாகி விளங்குகின்றார்.

***

சிவபெருமானையும் பார்வதி தேவியையும் கையாற் பரிசித்துப் பூசிக்கும் பேற்றை யுடைய ஓர் ஆதி சைவனுக்கு அன்ன மளித்தவன் அநேக கோதானப் பலனைப் பெறுவான்.

***

எவ்வளவு காலம் சிவபெருமானை ஒரு மனிதன் பூசை செய்ய வில்லையோ அவனுக்கு அவ்வளவு காலமும் தரித்திரம், ரோகம், துக்கம், சத்துருத் துன்பம் ஆகிய நான்கு விதங்களான பாவங்கள் சித்தித் திருக்கின்றன.

***

கிடைத்தற்கரிய மனித சரீரத்தை யடைந்த எந்த மனிதன் சுகம் சந்ததி இவற்றில் விருப்ப முள்ளவனாக விருக்கின்றானோ அவன் சர்வ இஷ்டங்களும் சித்திப்பதற்காக மகா தேவனைப் பூசை செய்ய வேண்டும்.

***

மாநுடனுக்கு எப்பொழுது அசாத்தியமான துக்க முண்டாகுமோ அப்பொழுது அந்தத் துக்க மொழியவும் சுகமுண்டாகவும் முத்தி யடையவும் சற்குருவைப் பணிந்து, அச் சற்குருவால் மந்திரோபதேசம் பெற்றுச் சிவ பூஜை செய்ய வேண்டும்.

செய்தித் திரட்டு

18 வருஷம் தூங்கிய பெண்

தென்னாபிரிக்காவைச் சேர்ந்த ஜோகான்ஸ் பர்க்கிலுள்ள ஆஸ்பத்திரி யொன்றில் 18 வருடங்கள் ஒரே தூக்கம் தூங்கிய ஒரு பெண் தற்போது சமீபத்தில் கண் விழித் தெழுந்தாள். 1910ம் வருடம் இவளுடைய காதலன் இறந்தபோது இவளுக்கு 20 வயதானதாயும், தன் காதலனை இழந்த வருத்தத்தால் இப்பெண்ணுக்கு ஒரு விதக் கொடிய வலிப்பு கண்டு அதன் பிறகு அப்பெண் ஒரே தூக்கத்திலாழ்ந்து விட்டதாயும், அப்பெண்ணை அத் தூக்கத்திலிருந்து எழுப்ப, என்ன செய்தும் பயன் படாமல் 18 வருடங்கள் தூங்கிச் சமீபத்தில் தானாகக் கண் விழித் தெழுந்த தாயும் தெரிகிறது.

அப்பெண் இவ்வாறு ஓயாமல் தூக்கத்திலிருந்த போது இரண்டு மணிக்கு ஒரு தரம் மெல்லிய ரப்பர்க் குழாய் மூலமாக வைத்திய நிபுணர்கள் ஆகாரத்தைச் செலுத்தி வந்தார்களாம். இப்பெண் சிறிது சிறிதாகத் தான் கண் விழித் தெழுந்த தாயும், விழித்தெழுந்த அப்பெண் வெளியில் தலை காட்டாமல் வெட்கப் பட்டுக் கொண்டு யாரை யாவது பார்த்தவுடன் தன் தலையை மூடிக் கொள்ளுவதாயும், அப்பெண் இது வரை ஏதோ நன்கறிய முடியாத இரண்டொரு வார்த்தைகள் மட்டுந் தான் பேசியதாயும் சொல்லுகின்றனர்.

பதினெட்டு வருடம் தூங்கி எழுந்த அப்பெண் உலகமே முற்றும் மாறுதலடைந்திருக்கக் கண்டு வியப் படைந்தாள். அப்பெண் தூங்கத் துவக்கிய போது ஆகாய விமானத்தைக் குறித்துப் பேச்சுத் தானிருந்த தாயும், அக்காலத்தில் விமானங்கள் பறக்கக் கூடுமோ வென்பதைக் குறித்த ஆராய்ச்சிகள் முற்றுப் பெறாதிருந்த தாயும் ஆகாச வசனி என்பது கனவிலும் கருதப் படாத ஒரு சம்பவமாக இருந்ததாயும் சொல்லுகின்றனர். மேலும் உலகமகா யுத்தம் ஏற்படக் கூடுமோ வென்ற விஷயம் 1910-ம் வருடத்தில் சந்தேகத்திலிருந்த தாயும் கூறுகின்றனர். ஆகவே 18 ஆண்டுகள் நெடுந் தூக்கம் தூங்கி விழித் தெழுந்த அப்பெண் உலக சரித்திரத்திலேயே கேட்டிராத கொடிய மகா யுத்தத்தின் கஷ்ட நஷ்டங்களிலிருந்து விடுபட்டு முன்னேற உலகம் பெருமுயற்சி செய்து வருவதைக் காண அவளுக்கு அளவற்ற வியப்புண்டாகுமென்பதில் ஐயமில்லை.

18 அடி வாலுள்ள சேவல்

ஜப்பான் சேவல் நூதனம்

டோரண்டோலில் சமீபத்தில் நடைபெறும் ஜீவ வர்க்க கண் காட்சிக்கு ஜப்பானிலிருந்து வெள்ளிப் புள்ளிகளுள்ளதும் 18 அடி நீளமான வால்களுள்ளதுமான மூன்று சேவல்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. இந்தச் சேவல்கள் ஜப்பானியரால் பரிசுத்தமான சேவல்களாகக் கருதப்படுகின்றன. இந்த மாதிரி சேவல்கள் ஜப்பானை விட்டு வெளி நாட்டுக்கு அனுப்பப் படுவது இதுதான் முதல், தடவை என்று சொல்லப்படுகிறது.

தென்னாப்பிரிக்காவில் நூறு வயதிற்கு மேலான ஒருவனும் 95 வயதுக்கு மேற்பட்டவர் நால்வரும் கலியாணம் செய்துகொண்டார்களாம். 85 வயதுக்கு மேற்பட்ட மாப்பிள்ளைகள் அங்கு 300 பேர் உண்டாம். நூறு வயதிற்கு மேற்பட்ட மணப்பெண்கள் மூவராம்! தென்னாப்பிரிக்கா அரசாங்கத்தார் வெளியிட்டுள்ள கலியாணக் கணக்கு அறிக்கையில் இவை காணப்படுகின்றன.

ஜப்பானிய குடித்தனங்களில், தலை சீவி விழும் ரோமங்களைச் சேர்த்து வைத்து மேஜோடுகள் செய்கிறார்கள். அவைகளை நீண்ட கயிறுகளாகப் பின்னிப் பலமாதிரியான மேஜோடுகள் நெய்கிறார்கள். மனித ரோமம் குளிரைத் தடுக்கும் என்ற நம்பிக்கையினால் சாதாரண மேஜோடுகளுக்கு மேல் இவைகளை அணிகிறார்கள்.

வர்த்தக ஸ்தலங்களில் பணத்தை எண்ணி நாணயவாரியாகப் பிரித்துக் கணக்கெழுதுவதற்காகப் புதிய இயந்திரமொன்றைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். இந்த இயந்திரம் ஒருவர் நான்கு மணி நேரத்தில் செய்யும் வேலையை ஒரே மணி நேரத்தில் செய்து விடுகிறது.

மதிப்புரை

"பரம இச்சாஞான தீபிகை எனும் காரிய சித்தாந்தம்." இது தத்துவ ஞானி ஸ்வீடன்பர்க் என்பவர் எழுதிய "வெளிப்படுத்தின விசேஷ விளக்கம்" என்னும் லத்தின் நூலின் ஒருபகுதி. முன் "நியூரிபார்மர்" பத்திராதிபரான திரு. D. கோபால் செட்டியாரவர்களால் மொழி பெயர்க்கப்பட்ட தமிழ் நூல். ஆசிரியர் ஸ்வீடன்பர்க் சிறந்த அனுபவமுடைய தத்துவ ஞான தரிசினி என்பதும் அவர் கொள்கைகள் பல சைவ சித்தாந்த உண்மைகளை யொத்து மிளிர்கின்றன என்பதும் நண்பர்கள் பலர் அறிந்தவையாம். இந்நூலில் பரம இச்சா ஞான சத்திகளின் தன்மை காரியம் முதலியவற்றை விவரித்து யோக சூக்கும உண்மைகளை விளக்கி, கிறிஸ்தவ விவிலிய நூல் (Bible) வாக்கியங்கள் பலவற்றிற்குப் புத்துரை பலரும் வியக்கக் கண்டுள்ள பான்மை நோக்கத் தகுந்தது. சைவாகமங்களில் விவரித்துள்ள இச்சா ஞான சத்திகளின் தன்மை, காரியம் முதலியன ஆசிரியர் ஸ்வீடன்பர் கருத்துக்களோடு எம்மட்டில் பொருந்தியும் எம்மட்டில் திரிந்தும் நிற்கின்றன என்பது அறிஞர் நன்காராயற் பாலது; மேலைத்திசை ஞானிகள் நூல்களைப் படித்து நம்முடைய நூல்களோடு ஒப்பிட்டு நம்மறிவை விசாலப்படுத்திக் கொள்வது மிகச் சிறந்த கொள்கை. நாம் இந்நூலை நண்பர்கள் அனைவரும் வாசிக்க வேண்டுமென மிகமகிழ்ச்சியோடு கேட்டுக் கொள்கிறோம். வேண்டுவோர் மொழி பெயர்ப்பாசிரியர் திரு. D. கோபால செட்டியார் (முன் "நியூரிபார்மர்" பத்திராதிபர்) இராயப்பேட்டை, சென்னை என்ற விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்க. விலை ரூபா ஒன்று.

*** *** ***

ஸ்ரீ சிவஞான போதப் பொழிப்புரை:—இப்பெயர் கொண்ட ஒரு சிறு அழகிய நூல் வரப்பெற்றோம். சைவ சித்தாந்தத்திற்கு அடிப்படையாயுள்ள சிவஞான போதப் பன்னிரு சூத்திரங்களுக்கும் ஸ்ரீ சிதம்பரம் ஸ்ரீ சிவஞானத் திருத்தளி சிவ ஸ்ரீ செப்பறை சுவாமிகள் கூறிய உரையை அவரிடங் கேட்டுணர்ந்தபடி திருநெல்வேலி திரு. T. S காந்திமதி நாதன் பீ. ஏ. அவர்கள் பொழிப்பாகத் திரட்டிப் புத்தகரூபமாக அச்சிட்டுதவியது போற்றத்தக்கதாகும். இந்நூலின் கண்ணுள்ள குறிப்புரைகள் பாராட்டத் தக்கவை. வேண்டுவோர் திரு. ஆர். வி. சொக்கலிங்கம் பீ. ஏ. காரியதரிசி, **League of Non-Brahmin Youth, Millar's Road**, கீழ்ப்பாக்கம், சென்னை. என்ற விலாசத்திற் கெழுதிப் பெற்றுக்கொள்க.

உண்மைத் தெய்வ உணர்ச்சி

[தமிழ்ப்புலவர் சேலை. சகதேவ முதலியார்]

தெய்வம் ஒன்றுண்டென்னு முணர்ச்சி மகனாய்ப் பிறந்த எவனுக்கு முண்டு. என்னை, உலகின் கண்ணே பிறந்துழலு மகன் தன தறியாமையையும் வன்மை இன்மையையும் தான் செய்யுங் காரியங்களின் முயற்சி யளவிற் காண்கின்றான். தொடுக்குங் காரியங்கள் தூய்மைய வாயினும் நேர்மைய வாயினும் அவன் இடையறா முயற்சியு மூக்கமுங் கொண்டுய்ப்பானாயினும் அவை கடை போகாமையைக் கண்கூடாக் கண்டு கலுழ்கின்றான்; நோய் கொண்ட மகன் றனக்கு மருத்துவ நிபுணர்களைக் கொண்டு மருந்தூட்டினும் அம்மகன் தன் கண் முன்னிலையிலேயே அம்மைக்கண் செல்வதைக்கண்டு அலமந்து கண்ணீர்விட்டுக் கதறி யழுகின்றான்; தீரா நோயொன்றைக் கொண்ட ஒருவன் அந்நோயுடனே நாடோறும் வருந்தி நின்றும் நீண்ட காலம் ஆயுளோடிருப்பதையும், தேகதிடனும் மனவன்மையுங் கொண்டோனொருவன் திட்டென விழுந்து பொட்டெனப் போவதையுங் கண்டுங்கேட்டு மிருக்கின்றான். மேலும் நல்லார் மாழ்குவதையும் அல்லார் மகிழ்வதையும் பொல்லார் பொங்குவதையும் வல்லார் தயங்குவதையும் மகன் காணாத நாளுண்டோ! இம்மட்டோ, இயற்கை விநோதங்கட்கும் இடையிடையே காணும் உற்பாதங்கட்கும் காரணங்களை ஊகித்தாவது முற்றுமறிய இவனால் இயலுமோ! அவற்றை மாற்றவாவது ஆற்றவாவது அவனாலணுவளவாயினுங் கூடுமோ! இவற்றையெல்லா நோக்குமகன், 'எப்பொருட்கு மேலான மெய்ப் பொருளொன் றுண்டு, அதுவே இவ்வுலகின்கண் யாவற்றினையும் நடாத்தி வைக்கின்றது, அஃது இன்னதை இன்னவாறு இன்ன காலத்தில் இயக்குவிக்கின்றது என்பதை என்னால் எண்ணி யறிய இயலாது, யாவும் அதன் கருத்தின்படியே நிறைவேறுகின்றன' என மனத் தெளிவடையாது மற்றியாது செய வல்லானவன்?

இவ்வுண்மை தெரித்தற் கன்றோ உலகின்கண் பற்பல சமயங்களில் பலப்பல சமயாசாரியர்கள் தோன்றித் தாந்தாம் கண்டனவற்றைத் தந்தம் நாட்டின்கண்ணுள்ள மககட்குழாங்கட்கு அறிவுறுத்திப் போந்தனர். இவர்கள் கடவுளைப் பற்றித் தத்தமக்குத் தோன்றியவாறு ஒன்றுபட்டும் வேறுபட்டும் கோட்பாடுகளை ஏற்படுத்தலாயினர். இதுவே இவ்வுலகின்கண் பற்பல சமயங்கள் தோன்றி நிலவுதற்குக் காரணமாயிற்று. கடவுள் உண்மையைப் பகரும் இச்சமயங்கள் அவர்தம் இலக்கணத்தைப் பற்றிப் பற்பலவாறு பேசுகின்றன. கடவுள் ஒருவரே உள்பொருள், மற்றவையனைத்தும் இல்பொருள் என்றும்; தீயே கடவுள் என்றும்; கடவுள் பூமியில் அவதாரங்கள் எடுப்பாரென்றும், அவ்வாறெடுத்த ஒவ்வொரு அவதாரமும் கடவுள் என்றும்; கடவுட்டன்மையொடு தோன்றி அற்புதங்கள் நிகழ்த்திய அடியார்களின் மூலமே அக்கடவுளைக் கண்டு முத்தி யடைய வேண்டும் என்றும்; கடவுட்கு மனைவி மக்கள் உண்டென்றும் இன்னோரன்ன இலக்கணங்களால் கடவுளைப் பற்றி இயம்பாநிற்கும் இம்மதங்கள்.

ஒரு மதத்தை அநுசரிக்கும் மக்கள் அம்மதக் கோட்பாட்டினின்றும் பிறழாமல் அதனெல்லைக்குணின்று கட்டுப்பட்டு நிற்கின்றாரில்லை. சிலை ரூபமாகக் கடவுளைக் கண்டு தரிசித்து ஆனந்திக்கும் ஒருவன் ஏனைய மக்களுடன் சச்சரவு பட்டுக் கோயிலைத் தாளிட்டுப் போட்டு ஏடுமெழுத்தாணியுமாய் நியாயவாதியின் பின்னாற் றிரியினும் திரிவான். தன்சமயமே உயர்ந்தது, ஏனையோர்களையெல்லாம் அதனையே தழுவும்படி செய்யச் சாத்திரக் கட்டளை யுண்டு என்பானொருவன் கையுங் கத்தியுமாய் மற்றவர்களை வெருவச்செய்து அவர் தம் மனப்பான்மை யின்றியே அவர்களைத் தன் மதத்தை யநுசரிக்க வற்புறுத்தியும் வருகிறான். கடவுள் அன்புருவமானவர், ஆகையின் எல்லா உயிர்களையும் அன்போடு பார்க்க வேண்டும் என்பானொருவன் உயிர்க்கொலை புரிந்து ஏனைய மக்கள் மீது பொறாமை கொண்டு பொய்வேடம் பூண்டும் திரிகிறான்.

இப்போது இவ்வுலகின்கண் நிலவு மதங்கள் தோன்றி எத்தனையோ நூற்றாண்டுகள் கழிந்தன. இவற்றின் போதனையால் மக்கட்குள் பொய் பொறாமைகள் ஒழிந்தனவா? கொலை களவுகள் மறைந்தனவா? ஏற்றத் தாழ்வுகள் தீர்ந்தனவா? செல்வத்திற் சிறந்தானொருவன் தான் உண்ணுஞ் சோற்றுக்கும் உடுக்கும் சீலைக்கும் சென்றது போக மிகுந்த பொருளை மிடியோர்க் கீந்து மகிழ்கின்றானா? அன்றி அதனைத் தன் சுற்றத்தார் நண்பர்கட்காயினு முதவி நலம் பெறுகின்றானா? உடுக்கவு முண்ணவு முடையானொருவன் மேன்மேலும் பொருள் சேர்ப்பதைவிட்டு உலகத்துக்கென்று உண்மை யுள்ளத்தோடு ஊழியஞ் செய்கின்றானா? மேலும் உலகின்கண் போர்க்களங்கள் இல்லா தொழிந்தனவா? உன் தெய்வம் என் தெய்வம் என்கின்ற போராட்டம் போயிற்றா? உடன் பிறந்தோராயினும் நியாய மேடை ஏறா தொழிந்தனரா? மக்கள் ஒற்றுமை என்கின்ற நற்றவம் புரிகின்றார்களா? தன்னலமிழக்க வேண்டும், பிறர்க்கென உழைக்க வேண்டும் என்று வாய்ஞானம் பேசுவோர் அதனைச் சிறிதளவாயினுங் கைக்கொண்டு தம்மையடுத்தவர்க்காவது நன்மை புரிகின்றாரா? உண்ணுஞ் சோற்றுக்குங் கொள்ளுங் கூலிக்குந் தக்க அளவாக வாவது தம் கடமையைச் செவ்வனே செய்து முடிப்போர் நூற்றுக்கு ஒருவராவது உண்டா? உண்மைக் கல்வியில் விருப்பமுடையோர் உலகத்தில் எத்தனை பேர்? மண் பெண் பொன்னாசைகளை வெறுக்க மனத்திற் கருத்துக் கொண்டவராவது எத்தனை பேர்? பொன்போன்ற மனத்தைச் சஞ்சலத்தாற் குரங்காக்காதவர் எத்தனை பேர்? இவைகளையெல்லாம் இம்மதங்கள் போதிக்கவில்லையா? இப்போதனைகளெல்லா மெவ்வாறாயின!

ஒரு மதத்தோனாய்ப் பிறந்தவன் அதன்கண் தன் மனத்துக் கொவ்வாதனவற்றையும் காண்கின்றான்; பிறமதங்களின்கண் தன் மனப்பான்மைக் கொத்தனவுங் காண்கின்றான்; இன்னுந் தன் மனத்துக் கொத்தன சில இம்மதங்களிலெல்லாம் இல்லாதன வாகவுங் காண்கின்றான். ஆகையால் இப்போது உலகில் வழங்கிவரும் மதங்கள் யாவும் அரை குறையானவைகளாகவே காணப்படுகின்றன. எம்மதம் எல்லா மதங்களையும் தன்னுட்கொண்டு, திகழுமோ எம்மதம் ஒரு பரிசுத்த ஆவல்கொண்ட ஆன்மாவின் தாபத்தைத் தணிக்குமோ, எம்மதம் பதி பசு பாசங்களின் இலக்

கணங்களை ஐயந்திரிபறத் தெரிக்குமோ, எம்மதம் அத்தகைய ஆன்மாவுக்கு இம்மைக்கண் நிலைபேறான இன்பங் கொடுக்குமோ, எம்மதம் இதற்குத் தக்க வழிகளைப் போதிக்குமோ, அதுவே எவ்வாற்றானும் யாவருக்கும் எக்காலத்திலும் சம்மதமான ஒப்பற்ற மதமாகும். அதுவே மதாதீதம் எனப்படும் சமரச சன்மார்க்க சைவமதமாம்.

மகன் இத்தகைய மதத்தைக் கைக்கொண்டவனாய், மனமொழி மெய்களில் ஒற்றுமை யுடையவனாய், எல்லா உயிர்கண் மீதும் ஒத்த அன்புடையவனாய், தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்பவனாய், தனக்கு நேர்ந்த கடமைகளைச் சிறிதும் வழுவாதுசெய்து முடிப்பவனாய், நல்ல வழியிற் பொருளீட்டி எல்லோருக்கும் ஊருணிபோற் பங்கிட்டுக் கொடுப்பவனாய், உற்ற விடத்தில் உயிர் வழங்குபவனாய் உலகின்கண் இருத்தல் வேண்டும்.

பஞ்ச பாண்டவர்களின் மூத்தோனாகிய தருமபுத்திரன் ஒரு முனிவரிடம் அறங்கேட்கத்தலைப்பட்டு அவர் 'அறஞ்செய விரும்பு' என்று முதற்கண் எடுத்துப் பொருள் விளக்கிய பின், அவன் அவரை நோக்கித் தனக்கு அம்மொழி யொன்றே போதுமென்றும், அதற்குமேல் தனக்கொன்றுஞ் செய்ய முடியாதென்றும் சொல்லி அதனோடு அறவுரையை நிறுத்திவிட அம்முனிவரைக்கேட்டுக் கொண்டானென்று ஒரு கதை வழங்குகின்றது. இஃது ஒருவன் கற்றபடியே நிற்றல் வேண்டுமென்பதை உணர்த்தா நிற்கின்ற தன்றோ? ஆயினும் நமது நாட்டில் நாலுவேதம், ஆறு சாத்திரம், அறுபத்து நான்கு கலைஞானம், பதினெண் புராணம், உபநிஷத்துக்கள், இதிகாசங்கள், நீதி நூல்கள் ஆகிய இவைகளெல்லாம் கணக்கற்றுக் கிடக்கின்றன. இவைகளில் ஓதப்பட்ட ஒழுக்கங்கள், அறங்கள், தானங்கள், நீதிகள் முதலியவை எண்ணிக்கையி லடங்கா. ஏனைய நாடுகளில் இவ்வளவு நீதிநூற் புத்தகங்களும், நியமமாதிகளும், விதி விலக்கு நூல்களும் கிடையவே கிடையா. இப்படி யிருக்க இவைகளை யெல்லாம் நம்மவர்கள் எவ்வளவு தூரம் அநுஷ்டிக்கிறார்கள்?

நொண்டி முடங்கட்குத் தம்மாலியன்றவளவாயினும் உதவி புரிபவர்கள் எத்தனைபேர்? மோட்டார் வண்டியிற் சென்று புகைவண்டியில் முதல் வகுப்பில் ஏறிப் போவோர் நொண்டி முடங்களைத் தடியெடுத்தடிப்பதை இச் சென்னையிலும் பிறவிடங்களிலும் எங்குங் காணலாம். 'பொய்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்குமெனின்' என்னுந் திருக்குறளில் 'புரைதீர்ந்த' என்பதை ஒழித்து மற்றப் பகுதியை மாத்திரம் கைக்கொண்டு பொய்க்கரி யுரைத்துந் தன்னலம்கெடாது பிறர் நலத்துக்கு ஊறுசெய்பவர்களை நியாயத்தலங்கள் தோறு நின்று காணலாகுமே. ஐம்பொறிகளின் புலன்களை அடக்க வேண்டுமென்றும் உட்பகை ஆறையும் அழிக்கவேண்டுமென்றும் ஞான நூல்களெல்லாம் வானுற வோங்கி முழங்குகின்றன. ஆயினும் அவைகட்கான வசதிகள் சிலவேனும் உண்டா? கோயில்களில் கணிகை மாதர் இருக்கலாகா தென்பதை ஆமோதித்துப் பேச எத்தனைபேர் முன் வருவார்கள்? தெருக்களிலும் வீடுகளிலும் கோபத்தால் வரும் சண்டை சச்சரவுகள் சற்றேனுங் குறைகின்றனவா? தினசரிப் பத்திரிகைகளில் வராத தான தருமச் செயல்களின் எண்ணிக்கை எவ்வளவு? பலவாறு சொல்லி என்ன? நமது நாட்டில் கற்றல் வேறு நிற்றல் வேறாய் முடிந்திருக்கின்றது. மேனாட்டார் கூடிய வரையில் தாங்களறிந்த ஒவ்வொன்றையும் அநுஷ்டானத்துக்குக் கொண்டு வருகின்றனர். அவர்கள் உதவி யின்றேல் நமது கோயில்கள் நிற்குமா, வேத புராண இதிகாச நூல்கள் பிழைக்குமா? பரவுமா? நீதி முறை நடுவு நிலைமையாய் நடக்குமா? கல்வி தான் இவ்வளவு கூட விருத்தியாக அநுகூலங்கள் ஏற்பட்டிருக்குமா?

இவைகளெல்லாம் இவ்வாறு மாறுபாடாக நடந்தேறி வருவதற்குக் காரணந்தான் என்னை? தெய்வத்தைப் பற்றிய பொய்ம்மை யுணர்ச்சியே. நமது நாட்டிலே பெரும்பான்மையோர் பலியிடுவதனாலும், உற்சவங்கள் நடத்தி வைப்பதனாலும், சோம்பேறிகட்குச் சோறூட்டுவதனாலும், கோயில்களுக்கென்று மட்டற்ற பணத்தைச் செலவு செய்வதனாலும் மறுமையில் நிலைபேறான முத்தியின்பத்தை யடையலாமென நம்பி யிருக்கின்றனர். மக்கள் உண்மை ஞானம் பெறுவதற்குக் கல்வியே அடிப்பீடமாகும். அக்கல்வியில் எவ்வளவு பணம் செலவழிந்தாலும் அது புண்ணியத்திற் சேரும். இக்காலத்தில் முக்கியமாய் நமது நாட்டில் கல்வித் தானத்தை விட வேறெத் தானமும் அவ்வளவு புண்ணியப் பயன் தராது. இக்கல்விப் புண்ணியத்தை எவன் செய்கின்றானோ அவனே ஞானியாவான், அவனே கடவுள் கட்டளையை நிறைவேற்றியவனாவான், அவனே மெய்யடியானாவான், அவனே கடவுளைக் கண்டு இம்மைக் கண்ணே இடையறா இன்பத்தைப் பெறுவான்.

எவன் தனக்கிட்ட விடத்தில் நின்று தன் கடமையைச் செவ்வனே செய்து முடிக்கின்றான்? எவன் அல்வழி யகற்றி நல்வழியிற் பொருள் தேடுகின்றான்? எவன் அப்பொருளை முதலில் தன் உற்றார் பெற்றார்கட்கும், பிறகு ஊரார் நாட்டாருக்கும், அதன் பிறகு பொதுவில் உலகத்தாருக்கும் ஈத்துவக்கின்றான்? எவன் தனக்கென வொன்றில்லாது எல்லாம் பிறர்க்கேயென எண்ணுகின்றான்? எவன் உலகத்தின்பொருட்டு உயிர்விடத் துணிந் திருக்கின்றான்? எவன் எல்லா மக்களையும் தன் மக்களென்றே தழுவுகின்றான்? எவன் எவ்வுயிரையும் தன்னுயிர்போல் மதிக்கின்றான்? எவன் தானே யுழந்து போசனம் புசிக்கின்றான்? எவன் மடியே மிடியென வெறுத்துத் தள்ளுகின்றான்? எவன் முயற்சியிற் கடைபோக நிற்கின்றான்? எவன் கோப வெறியைக் கொள்ளா தொழிக்கின்றான்? எவன் வைததனை இன்சொல்லாக் கொள்கின்றான்? எவன் இறப்புக்கு அஞ்சாதிருக்கின்றான்? எவன் பிறர் நோய் கண்டழுகின்றான்? எவன் நம்பினோரைக் கைவிடாது காக்கின்றான்? எவன் உலகத்தில் ஞானம் பரவ வேண்டுமென்று உழைக்கின்றான்? எவன் பிறர்க்கு என்பும் உரியனாகின்றான்? எவன் மனத்துக்கண் மாசைப் போக்கி அறத்தின்கண் அகமகிழ்கின்றான்? எவன் அன்பே சிவமென்று எண்ணிப் போற்றுகின்றான்? அவனே தூய்மையான சைவ மதத்தை அநுசரிக்கின்றவன். அவனே வேத சாத்திர இதிகாச புராணங்களை யறிந்தவன். அவனே நாற்பாற் குலத்தில் மேற்பாலொருவன். அவனே சிறந்த மதாசாரியன். அவனே அவத்தை யொழித்த தவசிரேஷ்டன். அவனே சாலோக சாமீப சாரூப சாயுச்சிய பதவிகளை யடைந்தவன். அவனே உண்மைத் தெய்வ வுணர்ச்சி யுடையோன்.

கடவுள்

[R. M. அண்ணாமலை செட்டியார்]

இவ்வுலகத்திலே அறிவுடைய பொருள்களும் அறிவில்லாத பொருள்களும் நம் அநுபவத்திற் காணப்படுகின்றன. அறிவுடைப் பொருளென்றாலும் ஆன்மாவென்றாலும் பொருந்தும். அறிவிலாப் பொருளென்றாலும் சடமென்றாலும் பொருந்தும். இனி ஆன்மாக்கள் தாமே இயங்கக் கூடியனவாகவும் சடப்பொருள்கள் அறிவுடைப் பொருளியக்கினாலன்றித் தாமாக இயங்க மாட்டாதனவாகவுமிருக்கின்றன. இவ்வுலகமோ நிலம், நீர், தீ, வளி, வெளி என்னும் ஐம்பெரும் பூதங்களாலாக்கப் பட்டிருக்கின்றது. அப்பூதங்கள் தாம் அறிவற்ற சடமாக இருந்தும் தோன்றவும் நிற்கவும் அழியவும் காண்கின்றோம். ஆனால் ஆன்மாக்களாகிய நாமெல்லோரும் அறிவுடைப் பொருளாக இருந்தாலும் அப்பூதங்களாலாக்கப்பட்ட உடலைக் கொண்டே அறிவு விளக்கம் பெறக் காண்டலாலும் அப்பூதங்களோ அறிவற்ற சடமாக இருத்தலால் தாமாக இயங்க மாட்டாவாதலாலும் பாரிசேட அளவையினாலே மற்றொரு பேரறிவுடைப் பொருளாலேதான் இவ்வுலகம் முத்தொழிற்படல் வேண்டுமென நன்றாக நிச்சயிக்கலாகும். அப்பேரறிவுடைப் பொருள்தான் கடவுள் என்று சொல்லப்படும்.

இனிக் கடவுள் என்ற சொல்லிற்கே கடந்து நிற்றலையுடையது என்பது பொருளாகும். எதைக் கடந்து நிற்றலையுடையதெனின் தத்துவங்களைக் கடந்து நிற்றலையுடையது. நாம் எதையும் நம்மனம் வாக்குக் காயங்களைக் கொண்டே அறிகின்றோம். மனம் வாக்குக்காயங்களோ தத்துவங்கள். எனவே தத்துவங்களைக் கொண்டு தத்துவப் பொருளைக் காணக் கூடுமேயன்றித் தத்துவங்களைக் கடந்து நின்ற கடவுளைக் காண முடியாது. எனவே கண்ணாற் காணப்படாமை கொண்டு கடவுளை இல்லையென்று சொல்லுதல் கூடாதென்க.

இனி நமது உடலையே எடுத்துக் கொள்வோம். கண் உடலைக் காணும். அந்தக் கரணம் கண்ணைக் காணும். உயிர் அந்தக் கரணத்தைக் காணும். கடவுள் உயிரைக் காணும். உயிர் கடவுளைக் காணாது. அந்தக் கரணம் உயிரைக் காணாது. கண் அந்தக் கரணத்தைக் காணாது. உடல் கண்ணைக் காணாது. இதை மற்றொரு விதமாகச் சொல்வதனால் கடவுள் உயிரையும் அந்தக் கரணத்தையும் கண்ணையும் உடலையும் காண்பார். உயிர் அந்தக் கரணத்தையும் கண்ணையும் உடலையும் காணும். கண் உடலை மாத்திரம் காணும். உடல், கண்ணையும், அந்தக்கரணத்தையும் உயிரையும் கடவுளையும் காண மாட்டாது. கண் அந்தக் கரணத்தையும் உயிரையும் கடவுளையும் காணமாட்டாது. அந்தக் கரணம் உயிரையும் கடவுளையும் காண மாட்டாது. உயிர் கடவுளைக் காண மாட்டாது. எனவே உடலாற் காணப்படாமை கொண்டு கண் இல்பொருளாகாது. அந்தக் கரணத்தாற் காணப்படாமை கொண்டு உயிர் இல்பொருளாகாது. உயிராற் காணப்படாமை கொண்டு கடவுள் இல்பொருளாகாது. எனவே கருவி கரணங்களாற் காணப்படாமை கொண்டு

கடவுளை இல்லையென்று சொல்லுதலடாதென்பது சாதிக்கப்பட்டது.

இனி, நம்மால் வழங்கப் பெறும் சொற்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பொருளைக் குறித்தாக இருப்பதாகவே நம் அநுபவத்திற் காணப் படுவதால் கடவுள் என்ற சொல்லைக் கொண்டே அச்சொல்லிற் குரிய பொருள் ஒன்று உண்டென்று கொள்வோம்.

இனி ஒரு மணி காட்டியை எடுத்துக் கொள்வோம். அதில் அமைக்கப்பட்டிருக்கும் சக்கரங்கள் முதலியவற்றையெல்லாம் உற்று நோக்கும்போதும் அவை தமது வேலையைச் சரிவரச் செய்துகொண்டு வருவதை நினைக்கும் போதும் இஃதோர் புத்திமானால் செய்யப்பட்டிருத்தல் வேண்டுமென்று உணரக்கிடத்தல் போல இவ்வுலகத்தில் இங்கே காணப்படும் சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள், கடல், மலை முதலியவற்றையெல்லாம் உற்று நோக்கும் போதும் அவை தமது வேலையைச் சரிவரச் செய்துகொண்டு வருவதை நினைக்கும்போதும் இதுவும் ஒரு புத்திமானால் செய்யப்பட்டிருத்தல் வேண்டுமென்று உணரக் கிடக்கின்றது. ஆதலால் கடவுள் ஒருவர் உண்டென்பதே பெறப்படுகின்றது.

இனி, கடவுளை உண்டென்பார் பலராகவும் இல்லையென்பார் சிலராகவுமிருத்தலினாலே பெரும்பான்மையே பிரமாணம் என்னும் வழக்குண்மையாலே இதனாலும் கடவுள் ஒருவர் உண்டென்றே தெரிகின்றது. இன்னும் நிலம், நீர், தீ, வளி, வெளி என்று சொல்லப்பட்ட பூதங்கள் ஐந்தனுள் காற்றென்று சொல்லப்படும் வளியானது பரிச வுணர்ச்சிக்கு மாத்திரம் புலனாகின்றதேயன்றிக் கண்ணுக்குப் புலனாவதில்லையே. அவ்வாறிருந்தும் காற்றையில்லையென்பாரொருவருமில்லை. எனவே கண்ணாற் காணப்படாத சடப்பொருளாகிய காற்றைக் கூட உண்டென்று ஒப்புக் கொள்கின்ற நாம் கண்ணாற் காணப்படாமை கொண்டு அறிவுடைப் பொருளாகிய கடவுளை இல்லையென்று சொல்லுதல் தகுமோ சொல்லுமின்!

இனிக் கடவுளில்லையென்று வாதிக்கும் நாத்திகர்களுங் கூடத் தாங்கள் பசி, பிணி முதலியவற்றால் துன்புறுங் காலங்களில் தங்கள் நாத்திக வாதத்தையெல்லாம் மறந்து கடவுளையே நாடுகின்றார்கள். இதனாலே கடவுள் ஒருவர் உண்டென்பது குறிப்பாலுணரக் கிடக்கின்றது.

இனிச் சிலர் இவ்வுலகமானது மேற்கூறியபடி முத்தொழிற் படல் உண்மையேயாயினும் அவ்விதத் தோற்றக் கேடுகள் அதற்கு இயற்கையேயென்றும் அதற்காக ஒரு கடவுள் வேண்டப்படுவாரல்லரென்றும் கூறா நிற்பர். அவரது கொள்கையை யாராய்வோமாயின் தோன்றலும் கெடுதலும் விகாரமாதலின் அவ்விதம் விகாரமாதல் இயல்பினுக்குக் கூடாது. அல்லது அவ்வித விகாரமே அதற்கு இயல்பென்பராயின் அவ்வித காரியம் விகாரமெனப்படுமேயல்லாது இயல்பென்பது இல்லாது போய்விடும். அன்றியும் அவ்விகாரமானது செய்வினையாதலால் அவ்விதச் செய்வினையும் செயல் செய்வானொருவனையின்றி யமையாதென்க. உதாரணமாகக் குடம் முதலிய பொருள்கள் தாமே மண்ணினின்றும் தோன்றாமல் குயவனது கிரியா விசேடத்தால் தோன்றுவது யாவர்க்கும் பிரத்யட்சமாதல் போல இவ்வுலகத்தையும் இதன் காரணத்தினின்றுங் காரியப்படுத்துவதற்குக் கடவுள் ஒருவர் வேண்டப்படுவாரென்பதே தேற்றமாம். இதுகாறும் கடவுள் உண்மைக்குப் பிரமாணம் ஒரு சிறிது [illegible]து.

187124

சற்காரிய வாதம்

[(வேள்) M. துரைக்கண்ணன்]

“உள்ளது போகாது, இல்லது வாராது” என்னும் உண்மையை யுணர்த்துவதே சற்காரியவாதம் எனப்படும். இதனை விரிவாக ஆராயுமிடத்து, உலகமும், உலகத்திலுள்ள பொருள்களும் எக்காலத்தும் அழிதன் மாலையனவல்ல வென்பதே முடிந்த பொருளாம்.

உலகம் நித்தமாயின் தோற்றம், காப்பு, அழிப்பு என்னும் மூவினையுடைத் தென்றல் யாங்ஙனம் பொருந்தும் எனின், அற்றன்று ; ஒருவனென்றும், ஒருத்தியென்றும், ஒன்றென்றும் இவ்வாறு அவயவப் பகுப்புடைத்தாயும், பலவேறுவகைத்தாய்ச் சடமாயுஞ், சுட்டியறியப் படுவதாயு மிருத்தலின் இம்மூன்றேதுவானும் உலகம் தோன்றி நின்றழியு மென்பது துணியப்படும். தோற்றமும் ஈறும் உள்ளதன்பாலே உண்டாவதாமாதலி னென்க.

உலகம் உள்ளதாயின் உள்ளதற்கு உண்டாக வேண்டுவ தில்லை யாகலாற் சற்காரிய வாதம் அடாது எனின், உள்ளதாயினுஞ் சங்கார காலத்தி னொடுங்கிய தாகலான், அவ்வொடுங்கிய உலகம் தானொடுங்குதற்கு நிலைக்களனான சங்கார கருத்தாவினின்றும் படைப்புக் காலத்தின் மீள வுளதாம். அற்றேல் ஒடுங்கியது ஒடுங்கியவாறே யொழியாது மீளவுண்டாக வேண்டா வேண்டுமாயின் முன்னொடுங்காத நிலை பெறவே யமையும் ; அவ்வாறன்றி ஒடுங்கி மீளவுளதாவது எற்றுக்கெனின்; உள்ளதாகிய உலகம் கருமமலம் பரிபாக மாதற்பொருட்டு ஒடுங்கி, ஆணவ மலம் பரிபாக மாதற்பொருட்டு மீளவுமுண்டாம். அற்றேல் முன்னின்ற உலகம் நாசமாக, வேறு தோன்றுமென்னாமல் அதுவே ஒடுங்கி நின்று மீளவுளதாமென்றற்குப் பிரமாணம் என்னையெனின், எஃதெவ்வாறு நின்றொடுங்கிற்று அஃதவ்வொடுங்கிய வாறே உளதாதல் எல்லாரானும் விரும்பப்படும். எனவே, அந்நியம மில்லையாயின் நெற்கமுகாய் நீளாது நெல்லாய் நீளுதற்கு ஏது வென்னை யென்னுந் தருக்கமே அதனை யறிவுறுத்தும்.

இனி, சற்காரிய வாதத்தின் அவ்வக் காரியங்கள் தத்த முதற்காரணத் தொடுங்குமெனவே கோடலில், உலகிற்கு முதற்காரணமாகிய மூலப்பகுதி (மாயை) சங்கார கருத்தாவின் மாட்டொடுங்கும்.

“இலயித்த தன்னிலில யித்ததாம லத்தா
லிலயித்த வாறுளதா வேண்டும்–இலயித்த
தத்திதியி லென்னி னழியா தவையழிவ
தத்திதியு மாதியுமா மங்கு”

எனச் சற்காரியவாதங் கூறவே இலயித்த வவத்தையின் அவ்வக்காரிய சத்தி சமூகமாய்ச் சூக்குமமாய் நிற்பது முதற்காரணமாகிய மாயை யென்பது பெறப்பட்டது.

நிமித்த காரணனாகிய முதல்வன் உலகிற்கு முதற் காரண னல்லனாயினும், முதற்காரணமாகிய மாயைக்கு ஆதாரமாய் நிற்றலின், உலகம் ஆண்டொடுங்கி ஆண்டு நின்று தோன்றுதல் அமையும்.

மாயையும் உலகமும் வித்தும் அங்குரமும் போலுமாகலின், வித்துக்கு ஆதாரமாகிய நிலங்குளிர்ந்த வழி அதன்கண் வித்துள்ளதாக, அதனினின்றும் அங்குரந் தோன்றியவாறு போல, மாயை தனக்காதாரமாய் நின்று தோற்றுவிக்கும் இறைவனது சத்தியின் கணுள்ளதாய் நிற்றலால், அச்சத்தி சங்கற்பித்தவழி அவரவர் வினைக்கீடாக அவ்வக்காரியங்களை அவ்வவ்வியல்பிற் பிறழாமற் பயக்குஞ் சதுரப்பாடுடைத்தாம். அல்லுழி உடைத்தன்று. நிலங் குளிர்ந்த வழி அதன்கட் கிடந்தன்றி வித்து முளையைத் தோற்றாதவாறு போலும். ஆகலான் மாயையி னொடுங்கித் தோன்றிய உலகம் அதற்காதாரமாய் நின்ற இறைவன் சத்தியி னொடுங்கித் தோன்றியதேயாம். இது கிழங்கி னின்றுந் தோன்றிய தாமரையைப் பங்கய மென்பதனானு மறிக.

யாது யாண்டொடுங்கும் அஃததனி னுற்பத்தியாம். மண்ணிற் குடம் போலும் என்னும் அவினாபாவத்தால் உலகம் சங்கார காரணன் மாட்டொடுங்குதலின் மீளத் தோன்றுங்கால் ஆண்டு நின்றுந் தோன்றுதலே பொருத்தமுடைமையின் அவ்வாறு மேற்கொண்டது. ஆகலால் உள்பொருளெனப்பட்ட உலகம் தத்த முதற் காரணத்தினின்றுந் தானே தோன்றி யழியும். அவ்வுலகம் தானொடுங்குதற்கு நிலைக்களமான சங்கார கருத்தாவினின்றன்றி உளதாகாது.

வழி நூலாசிரியர், “உயிரவையொடுங்கிப் பின்னு முதிப்பதெனவன்பால்” என்றும், “உலகவனுருவிற் றோன்றி யொடுங்கிடும்” என்றும் ஓதியதூஉம் இவ்வியல்பு நோக்கி யென்க.

இவ்வாறு ஒன்றொன்றிற் றோன்றியுளதா யிறுதலாவதை, “பயில்வித்தெல்லாங் காரிட மதனிற் காட்டு மங்குரங் கழியும் வேனில்” என்னுஞ் சிவஞான சித்தியா லறிக.

செய்துஞ் செய்வித்தும் எல்லாத் தொழிற்கும் வினை முதலாய் நிற்கு முதற் கடவுள் சங்கார கருத்தாவொருவனே.

ஈண்டுச் சங்கார காரணன் என்றது ஐவகைச் சங்காரத்துள் இறுதிக் கண்ணதாகிய சாந்தியதீத கலையிலடங்கிய தத்துவ புவனங்களாகிய சுத்த மாயா புவனந்தஞ் சங்கரிக்குஞ் சங்கார காரணனாகிய பரமசிவனையே யன்றி அயன்மாலொடுங் கூடக் குணத்தத்துவத்தின் வைத்துப் பிரகிருதி புவனந் தஞ் சங்கரிக்கும் குணிருத்திரனை யன்றென உணர்க. இவ் வேறுபாடுணர்த்தற் கன்றே பொதுப்படச் சங்காரகாரணனை யென்றொழியாது சங்கார காரணனாயுள்ள முதலையே என விதந்தோதியதூஉமென்க.

தோற்றக் கேடுகள துண்மை காட்சி முதலிய அளவைகளான் அறிய வாராமையில் உலகம் நித்தப்பொருளேயாம். இவற்ற துண்மையை உலகுய்யத் தெரித்தற் கன்றே, மூன்று ஆண்டே நிரம்பப் பெற்ற பசுங் குழவியாய சுவேதவனப் பெருமான் தீஞ்சுவை ததும்பும் பானல் வாய் மலர்ந்து,

“அவனவ ளதுவெனுமவை மூவினைமையிற்
றோற்றிய திதியே யொடுங்கி மலத்துளதா
மந்தமாதி யென்மனார் புலவர்”

என்று அருளினார். இதற்கு உரை எழுதப் புகுந்த திராவிட மகா பாடிய கருத்தாவாகிய மாதவச் சிவஞான யோகிகள், “ஆண் பெண் அலி என்

றுற்போலும் உலகத்தொகுதி, தோற்றம் நிலை இறுதி என்னும் முத்தொழிலுடைமையான், ஒருவனுற் றேற்றப்பட்டு நின்று உள்ளதேயாம். அற்றேல், அஃது யாவனினுளதா மெனின், தானெடுங்குதற்கு நிலைக்களமான கடவுளினின்றும் உளதாம். ஒடுங்கியவாறே ஒழியாது மீளவுளதாவது எதனுலெனில், சகசமான ஆணவமலந் தீர்ந்தொடுங்காமையான் உளதாம். இங்ஙனமாகலின், சங்காரத் தொழிலைச் செய்யுங் கடவுளே முதற் கடவுளென்று கூறுவர் அறிவுடையோர்'' என்று விரித்தோதினர்.

இனி, எம்மருந் தெய்வமாகிய மெய்கண்டாரைப் பின்பற்றிய மற்றிரு சந்தான குரவரும், "உதிப்பது மீறுமுண்டென்றுரைப்பதிங் கென்னை முன்னோர், மதித்துலக நாதியாக மன்னியதென்பரென்னி, லிதற்கியானனுமாறுதியெடேனிப் பூதாதியெல்லாம், விதிப்படி தோற்றி மாயக் காணலான் மேதினிக்கே '' என்றும்,

"உலகமெலா மொருவனேடொருத்தி யென்றென்
றுளதாகி நின்றளவி
லொடுங்கும் பின்னு
மலமதனு லுளதாகு
முருவ மாறி
வருவது போவது
செல்வ தாதலானு
மலவில சேதன
மாயை யாதலானு
மனுக்க ளுருவுடையு
மறிவிலாமை யானு
நிலவு தொழின்
மருவியரு நிற்றலானு
நின்றனவயு மளித்திடவெ
னிமலன் றனே"

என்றும்,

"உள்ளது போகா தில்லது வாரா
துள்ளதே யுள்ளதெனு முறையதனுல்"

என்றும் அருளிய அருள் வாக்குகளே வலியுறுத்தும்.

இதன்றியும்,

"விச்சதின்றியே விளைவு
செய்குவாய் விண்ணுமு
மண்ணகம் முழுதும்
யாவையும்
வைச்சு வாங்குவாய்"

என்னும் மணிவாசகப் பெருந்தகையருளிய மணிவாசகமும்,

"விச்சின்றி நாறு செய்வானும்"

என்னும் தாண்டகச் சதுரராகிய திருநாவுக்கரையப் பெருமானின் திருவாக்கும் இச் சற்காரியவாதத்தை யுணர்த்துவதற்கே எழுந்தனவா மென்க.

இதனுல் கடவுளே யன்றி உயிர்களும், ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களும், மாயையின் காரியமாகிய உலகங்களும் அவ்வவ் வுலகங்களிலுள்ள பொருள்களும் என்றும் நித்தமாயுள்ள உள்பொருள்களே யாமன்றி, அழியும் பொருள்க ளல்ல. உயிர்களும், மும்மலங்களும் இறைவன்போல் நித்தமென்பதை,

"என்று நீ அன்று நான்"

என்றும்,

"சுடரொளியா னென்று முள
னன்றளவுமியானு முளனே"

என்றும்,

"எந்நான்றனை யுளமந்நான்றியாரும்"

என்றும்,

"பதிபசுபாச மெனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற்பசுபாச மனுதி
பதியினைச் சென்றணுகாப் பசுபாசம்
பதியணுகிற் பசுபாச நிலாவே"

என்றும்,

"நெல்லிற் குமியுநிகழ்
செம்பினிற் களிம்புஞ்
சொல்லிற் புதிதன்று
தொன்மையே—வல்லி
மலகன்மமன் றுளவாம்
வள்ளலாற் பொன்வா
ளலர்சோகஞ் செய்க
மலத்தாம்"

என்றும் வரும் திருவாக்குக்களானும் உணர்க.

அற்றேல், கடவுள், உயிர்கள், மும்மலம் ஆகிய முப்பொருளும் நித்தமென்றல் உண்மையே. உலகமும், உலகப் பொருள்களும் நித்த மென்றல் யாங்ஙனம்? உலகப்பொருள்களின் அழிவை யாம் தினமுங் காண்கின்றனமே! ஊழிக்காலத்து உலகமும் அழிகின்றதென்று சான்றோர்களும் நூல்களும் அறைகின்றனவே. ஆதலால் நீர் கூறும் சற்காரிய வாதம் அடாது எனின்; நன்று கடாயினுய்! உலகமும், அதிலுள்ள பொருள்களும் முதற்காரணமாகிய மாயையினின்றும் உண்டாவனவாம். இப்பொருள்க ளெல்லாம் அழிவனவாக நம் புலனுக்குத் தோற்றுவதெல்லாம் அம்மாயையினின் விகாரமேயாம். இவையெல்லாம் தங்கட்கு நிலைக்களனுகவுள்ள மாயையில் ஒடுங்கி மீளவுளதாவ தன்றி முற்றும் அழிந்து ஒழிவதில்லை. காரணம்போல் காரியமும் நித்தியமே யாகலான் முதற்காரணமாகிய மாயை நித்தமாதல் போல் அதனுல் காரியப்படும் உலகமும், அதிலுள்ள பொருள்களும் நித்தமே யெனவறிக. இதனுல் யாம் கொண்ட சற்காரிய வாதத்திற்கு உண்டாம் இழுக்கு யாது மில்லையென வொழிக.

அஃதல்லாமலும், உலகம் அநாதியென்பதற்கு,

"அநாதிவைய மற்றொரு கடவுளித்தைத்
தருதலா லாதியாகச் சாற்றலு மாகும்"

என்னும் அருள் வாக்கே சான்று பகரும்.

இங்ஙனமன்றியும், மாயையே முதற்காரணமாக நின்று நிமித்த காரணனுகிய கடவுளாணையால் உலகைத் தன்னினின்றும் விரியச்செய்து நடத்துகின்றதென்பதை,

"நித்தமாயருவாயேக நிலையதா
யகிலத்துக்கோர்
வித்துமாய சித்தா யெங்கும்
வியாபியாய் விமலனுக் கோர்
சத்தியாய்ப் புவன போகந்
தனுகரணமு முயிர்க்காய்
வைத்ததோர் மலமாய் மாயை
மயக்க முஞ்செய்யு மன்றே"

"மாயையிற் காலமொடு நியதி
பின்கலாதி தோன்று
மாயவக் காலமூன்று யாக்கியு
மளித்தும் போக்கிக்
காயமோ டுலகுக் கெல்லாங்
காலசங்கை யினைப்பண்ணி
நாயக னுணையாலே நடத்திடுஞ்
சகத்தை யெல்லாம்"

"நியதி பின்றேன்றிக் கன்ம
நிச்சயம் பண்ணி நிற்கு
மயர்விலாக் கலைபின் றேன்றி
யாணவ மொதுக்கிச் சித்தின்
செயல்புரி கிரியா சத்தி
தெரிவிக்குஞ் சிறிதே வித்தை
யுயர்கலை யதனிற் றேன்றியறி
வினையு திக்கப் பண்ணும்"

என்று அருணந்தி சிவாசாரிய சுவாமிகள் அருளி யமையானும் அறியலாம்.

உளதாகிய உலகத்தை முத்தொழில் படுத்தற்கு இறைவன் தான் நிமித்த காரணனு யிருந்து அருட்சத்தியைத் துணைக் காரணமாகவும், மாயையை

முதற்காரணமாகவும் நிலைபெறச் செய்கிறான். இவ்விதம் இறைவன் உலகத்தைத் தொழிற்படுத்துவதை யுணர்த்தற் கன்றே,

“ காரியகாரணங்கண்முதறுணை
நிமித்தங் கண்டாம்
பாரின்மண்டி ரிகைபண்ணு
மவன்முதறுணை நிமித்தந்
தேரின்மண் மாயையாகத்
திரிகைதன் சத்தியாக
வாரியன் குலாலனாய்
நின்றாக்குவனகிலமெல்லாம் ”

என்று அருணந்தி சிவாசாரிய சுவாமிகள் அருளிச் செய்ததூஉம் என்க.

இவ்விதம் என்று முள்ளதாகிய உலகத்தை முவினைப்படுத்து நடப்பித்தற்குக் காரண மென்னையெனின், முன்னவன் விளையாட்டென்று மொழிதலொன்று, உயிர்களுக்கு மன்னிய புத்தி முத்தி வழங்கவும், அருளான் முன்னை துன்னிய மலங்களெல்லாந் துடைப்பதும் என்பது பிறிதொன்று இதுவேயுமன்றி, இறைவனின் இச்செய்கையெல்லாம் நுனித்த மதிகொண்டு நோக்கில் உயிர்களின்மேல் வைத்த கருணையேயாம் என்பது தெளிப்படும். இதனை யுள்ளவா றுணர்ந்த அருணந்தி சிவாசாரியரும்,

“ அழிப்பிளைப் பாற்றலாக்கமவ்
வவர்கன்ம மெல்லாங்
கழிந்திட நுகரச்செய்கை
காப்பது கன்மவொப்பிற்
றெழித்திட மலங்களெல்லா
மறைப்பருள் செய்திதானும்
பழிப்பொழிபந்தம் வீடுபார்த்திடி
லருளேயெல்லாம் ”

என்று விளக்கிப் போந்தார்.

இவ்வாறு சங்காரத்தி னொடுங்கிய உலகம் மீள வுளதாதற் பொருட்டு முதல்வன் தன்னுள் ஒடுங்கிய அருட்சத்தியை மீளத் தோற்றுவித்து, அதனினின்றும் மாயையைத் தோற்றுவித்து உயிர்களை விடாதுபற்றிக் கொண்டிருக்கிற ஆணவமலம் பரிபாக மாதற் பொருட்டு அதனைக் காரியப்படுத்தி உலகங்களையும், உலகப் பொருள்களையும் உளதாக்கி நிலைபெற செய்தலும், உயிர்களின் கருமமலம் பரிபாகமாதற் பொருட்டு அண்டத் தொகுதிகளெல்லாம் அணுவாகிக் காரண மாயையிலொடுங்க, அம்மாயை சிற்சத்தியிலொடுங்க, சிற்சத்தி சிவத்திலொடுங்க, இவ்வாறுதன்னுள் யாவற்றையும் ஒடுக்கி இறுதிக் காலத்து தான் ஒருவனாய் நிற்றலுமே யன்றி, இப்பொருள் உளதாதலும், உள்பொருள் இலதாதலும் யாண்டும் இல்லை யென்க.

இனி, முதல்வனையும் உயிர்களையும் போல் சடப்பொருளாகிய மும்மலமும் நித்தமாய் அழியாது உளதெனின், ஆணவ மலத்தால் கவ்வப்பட்ட ஓர் உயிர் திருவருளால் செலுத்தப் பெற்றுச் சத்திநிபாதம் உற்று இறைவன் திருவடியை யடைந்த காலத்து அவ்வுயிரினை விடாது பற்றிக் கட்டுப் படுத்திக் கொண்டிருந்த மும்மலமும் அழிந்து ஒழியா திருக்கு மன்றே! அவ்வாறிருப்பின் இறைவனடியை யடைந்த உயிர் மும்மல நீக்கம் பெறுமா றெவ்விதம்? ஒருகாலு மில்லை யாதலின் அவ்விடத்தில் மும்மலமும் அழிந்து மாய்தல் ஒருதலை யாதலால் நீ கூறும் சற்காரிய வாதம் பொருந்ாதெனின், நன்று கடாயினாய்? மும்மலங்களினால் பிணிப்புண்டு கிடந்த உயிர் கடவுள் திருவடியை யடைந்த காலத்தும், அவ்வுயிரினைக் கட்டுப்படுத்திக்கொண் டிருக்கும் மும்மலங்கள் அழிந்து ஒழிந்து போக

வில்லை. ஆயின் அவைகளின் ஆற்றல் ஆண்டவன் திருமுன் பயனிலதாய் ஒழிந்து தன் சத்தி குறைந்துபோதலே யன்றி, அந்நிலையில் உயிர் இன்பமடைதற்கு ஏதுவாயு மிருந்து உதவி புரிகின்றன. இதனை உள்ளவாறு உணர்த்தற் கன்றே,

“ வாக்குமன மிறந்தவான்
கருணை யாளனொரு
தாக்களவே நிற்குந்
தனிமுதல்வா—நீக்காப்
பதியினைப் போனித்தம்
பசுபாச மென்றாய்
கதியிடத்து மூன்றினையுங்
காட்டு. ”

என்றும்,

“ முத்திதனில் மூன்று
முதலு மொழியக்கேள்
சுத்தவனு போகத்தைத்
துய்த்தலனு—மெத்தவே
யின்பங் கொடுத்தலிறை
யித்தைவினை வித்தல்மல
மன்புடனே கண்டு
கொள்ளப் பா ”

என்றும் வினாவிடை முகத்தான் விளக்கியருளினார் சைவசிகாமணியாகிய திருவதிகை மனவாசகங் கடந்தார்.

இதன்றியும்,

“ ஒன்றலா வொன்றா
லுளதாகி நின்றவா
றொன்றலா வொன்றிலவை
யீறு—மொன்றலா
வீறே முதலதனி
லீறிலா வொன்றுபல
வாறே தொழும்
பாகு மங்கு. ”

என்றும்,

“ நசித்தொன்றி னுள்ள
நசித்தலா லொன்றா
நசித்திலதே லொன்
றாவதில்லை—நசித்துமல
மப்பணைந்த வுப்பினுள
மணைந்து சேடமாங்
கப்பின்றா மீசன்
கழல். ”

என்றும்,

“ பொன்வான் முன்கொண்
மூவிற்புக்கொடுங் கிப்போயகலத்
தன்வாளே யெங்குமாந்
தன்மைபோன்—முன்வான்
மலத்தின் மறைந்துள்ள
மற்றுவகை யுண்ணு
மலத்திரித்துச் செல்லும்
வரத்து. ”

என்றும்,

“ நெல்லினுக்குத் தவிடுமிக
ளனாதி யாயு
நெல்லை விட்டு நீங்கியவை
நின்றநிலை நிகழ்த்தீர்
சொல்லி யிடிற்று களற்ற
வரிசியின் பாலில்லைத்
தொக்கி ருந்து மற்றொரு
நெற்றொற் றிடாவா
மெல்ல வினை விடுமறவே
யவை போல வனுவை
மேவு மலமுடல் கன்ம
மனாதி விட்டே நீங்கு
நல்லசிவ முத்தியின்கட்
பெத்தான் மாவை
நணுகி நிற்குமாதலி
னனைசமு மின்றாமே. ”

என்றும்,

“ அழிந்திடும் பாசமென்னி
னித்தமென் றுரைத்தல்வேண்டா
வழிந்திடா தென்னின்
ஞான மடைவது கருதவேண்டா
வழிந்திடுஞ் சத்தி நித்த
மழிந்திடா வொளியின் முன்ன
ரழிந்திடு மிருளு நாச
மடைந்திடா மிடைந்திடாவே ”

என்றும் சித்தாந்த நூன் முடிவு தேறிய சந்தான குரவர்கள் அருளிய திருவாக்குகளானும் முத்தியினும் மும்மல முண்டென்பதை யறிந்து கொள்க.

இனி, முழுமுதற் கடவுளை யடைவதற்குச் சோபான முறையாக வைக்கப்படும் நெறிகள் பலவற்றுள்ளும் இச்சற்காரிய வாதத்தை யுணர்த்தும் நெறியொன்றேனு மில்லை. இந்நெறிகளுக்கெல்லாம் தலைமை பெற்றதாய், அவைகளில் கூறப்பட்ட உண்மைகளை யெல்லாம் தன்னுள் வாய்க்கப்பெற்று, அவற்றுள் அடங்காத பல விழுமிய பொருள்களைத் தன்னுள் நிரம்பப் பெற்று அவைகளினும் மிக்கு விளங்குவதால், சமயம் என்னும் பெயரைத் தனக்குச் சிறப்புப் பெயராய்க் கொண்டு திகழ்வதாயுள்ள சைவ சமய மொன்றே சற்காரிய வாதத்தை யுணர்த்தி நிற்கின்றது. ஆகலினாலன்றே சைவம் சற்காரிய வாதமென வழைக்கப்பட்டது.

இச்சற்காரிய வாதத்தி னுண்மையை மேனாட்டுப் புலமை மிக்க அறிஞர்கள் தங்கள் நுண்ணிய ஆராய்ச்சியால் கண்டறிந்து தெளிந்து பண்டைத் தமிழ் முதுமக்களின் தெய்விக உணர்ச்சியையும், இயற்கைப் பொருளுண்மைகளைத் தெளிந்து அவைகளில் இறைவனின் பூவின் நாற்றம் போன்றுயர்ந்தெங்கும் ஒழிவற நிறைந்த வியாபகத் தன்மையினைக் கண்டு வழிபட்ட நிலையினையும், கல்வியறிவின் மேம்பாட்டையும் நாகரிக வளர்ச்சியை வியந்து போற்றுகின்றனர்.

என்றிதுகாறும் கூறியவாற்றால் உலகமும், உலகப் பொருள்களும் பதிபசு பாசம் போன்று நித்தமேயா மென்பதும் நித்தமாகிய உலகம் உயிர்களுக்குச் சகல மலம் பரிபாகமாதற் பொருட்டுத் தோன்றியும், கருமமலம் பரிபாகமாதற் பொருட்டுத் தான் ஒடுங்கி முத்தொழிற் படுகின்ற தென்பதும், மூவினை யுடைமையாலேயே உலகம் நித்தமென்பது பெறப்படும் என்பதும், மாயை உலகைக் காரியப் படுத்தற்கு முதற் காரணமா யிருப்பினும், அம்மாயை சிற் சத்தியிலொடுங்கி, அதுவளிய வழி உலகத்தைக் காரியப்படுத்துகின்றமையின், அவ்வாறு மாயையைச் சங்கற்பிக்கும் சிற் சத்தியையும் தன் இச்சை வண்ணம் நடத்தும் முதல்வன் ஒருவனுளன், அவனே சங்கார காரணனாகிய பரமசிவன் என்பதும், நில முதலியவை தத்தங் காரணங்களுளொடுங்கி யாவும் மாயையி லொடுங்க, அம்மாயை சிற்சத்தியி லொடுங்க, சிற்சத்தி சிவத்தி லொடுங்குதலே யன்றி எப்பொருளும் சூன்ய மாத லில்லை யென்பதும், இவ்வுண்மைகளை உணர்த்துதற்கே சித்தாந்த சாத்திரங்கள் எழுந்தன வென்பதும், உண்மையில் சுத்தாத்துவித முற்ற காலத்து இன்பத்தினை யீவானும், இன்பத்தினை யேற்பானும், இன்பத்தினை விளைவிப்பதற்கேதுவும் ஆகிய மூன்று பொருளுமுண்டென்பதும், பரம் பொருள் போல் அழிவின்றி நித்தமாய்ச் சேதனப் பிரபஞ்சம் வீடுபேற்றின்கண்ணும் பலவாற்றானும் பரம் பொருளுக்கு அடிமையா மென்பதூஉம், "அன்றே யநாதி யமைந்தபடி யல்லாதொன்றின்றே புதிதா யிசையுமோ" என்னும் இச் சற்காரிய வாதத்தைச் சைவ சமய மொன்றே யுணர்த்துகின்ற தென்பதூஉம், மேலைத் திசைப் புலமை மிக்க பெருமக்களும் தங்கள் நுண்ணிய ஆராய்ச்சியால் இவ் வுண்மையைத் தெளிந்து போற்றுகின்றார்க ளென்பதூஉம் அறிந்தோம் என்பது. சிவம்.

அறிக்கை

அன்பர்களில் அநேகர் இன்னும் தங்கள் சந்தாத் தொகையைச் செலுத்தாது இருக்கின்றனர். அன்னோர் இதனைக் கண்ணுற்றவுடனே தயவுசெய்து தாமதமின்றி அனுப்புவார்களாக.

சிவமணிகள்

[சுவாமி ராமசுவாமி திரட்டியது]

சிவ நாமங்களை ஸ்மரிப்பவர்கட்கு உண்மையில் சுகமே விளையும்.

***

தத்துவ ஞான மடைந்தா லன்றி அஞ்ஞானம் அழிய மாட்டாது.

***

மாநுடருக்குப் பலவிதத் துக்கங்களும் அஞ்ஞானத்தாலேயே தோன்றுகின்றன.

***

ஞானத்தைக் காட்டிலும் பரிசுத்தமானதும் பரிசுத்த மாக்குவதும் பிறிதொன்று மில்லை.

***

அஞ்ஞானமுள்ள வரையில் இராகத்துவேஷாதிகளால் தர்மா தர்மங்கள் உண்டாகின்றன.

***

சத்தியத்தினாலேயே சரா சரப் பிரமாண்டம் முழுவதும் விளங்குகின்றது.

***

பிரபஞ்ச வாசிகள் யாவரும் மாயா சகிதராதலின் சிவபெருமானை ஒருவரும் அறிகிலர்.

***

சுவேச்சையால் எல்லாக் காரியங்கட்கும் கர்த்தாவாக விளங்குபவர் ஒருவரே.

***

போர் செய்தலும் நட்பாடலும் சமமானவர்களுட னன்றி அசமான மானவருடன் செய்த லாகாது.

***

சிவ சேவை செய்துகொண்டிருக்கையிலேயே கஷ்டம் வருமாயின் கர்மத்தால் வந்ததெனக் கொள்ள வேண்டும்.

***

அசத்திய வார்த்தைகள் கூறினோர் தாம் அதுகாறுஞ் செய்த புண்ணியங்களை இழந்து போவார்கள்.

***

பொய் பேசுகிறவன் பூர்வத்திற் செய்த புண்ணியம் முழுவதையும் க்ஷண காலத்தில் நாசப்படுத்துகிறான்.

***

சிவபெருமான் சத்தி சம்பந்தமாகவே நின்று எல்லாக் காரியங்களையும் நடத்துகிறார் என்று உணர வேண்டும்.

***

சிவமுஞ் சத்தியும், பூவும் மணமும், மணியும் ஒளியும், தீயும் சூடும் தண்ணீரும் குளிர்ச்சியும் போல அபேத நீங்க விளங்குகிறார்கள்.

***

பரமாத்மாவாகிய சிவபெருமானிடத்திற் சித்தத்தைச் செலுத்தி நிற்பதே ஞான யோகம்.

***

எப்பொழுது ஒருவர் மனத்தில் துக்கமுண்டாகிறதோ அப்பொழுது சிவபெருமானைப் பூசித்தால் அந்தத் துக்கம் ஒழிந்து போகும்.

***

சுகத்தை யடைய விருப்பமுள்ளோன் அவனது சர்வ இஷ்டங்களும் கூடி வருவதற்காக அநாதியான சிவரூபத்தைச் சிறந்த பக்தியோடு பூஜிக்க வேண்டும்.

***

சிவபெருமானிடத்தில் உண்மையான பக்தி கொண்டிருந்தால் எவ்வகைக் கஷ்டங்கள் வந்தாலும் அவை யாவும் சூரியன் முன் பனி போல் நீங்கிவிடும்.

சிவபக்தி செய்து கொண்டு விஷ்ணு தூஷணமும், விஷ்ணுபக்தி செய்து கொண்டு சிவ தூஷணமுஞ் செய்வோர் நரகத்தை அடைவார்கள்.

***

எங்கும் வியாபகமாயுள்ள சிவ பெருமானே எல்லாப் பிராணிகளினும் வியாபித்து சேதனு சேதனங்கள் யாவுந் தாமே யாகி விளங்குகின்றார்.

***

சிவபெருமானையும் பார்வதி தேவியையும் கையாற் பரிசித்துப் பூசிக்கும் பேற்றை யுடைய ஓர் ஆதி சைவனுக்கு அன்ன மளித்தவன் அநேக கோதானப் பலனைப் பெறுவான்.

***

எவ்வளவு காலம் சிவபெருமானை ஒரு மனிதன் பூசை செய்ய வில்லையோ அவனுக்கு அவ்வளவு காலமும் தரித்திரம், ரோகம், துக்கம், சத்துருத் துன்பம் ஆகிய நான்கு விதங்களான பாவங்கள் சித்தித் திருக்கின்றன.

***

கிடைத்தற்கரிய மனித சரீரத்தை யடைந்த எந்த மனிதன் சுகம் சந்ததி இவற்றில் விருப்ப முள்ளவனாக விருக்கின்றானோ அவன் சர்வ இஷ்டங்களும் சித்திப்பதற்காக மகா தேவனைப் பூசை செய்ய வேண்டும்.

***

மானுடனுக்கு எப்பொழுது அசாத்தியமான துக்க முண்டாகுமோ அப்பொழுது அந்தத் துக்க மொழியவும் சுகமுண்டாகவும் முத்தி யடையவும் சற்குருவைப் பணிந்து, அச் சற்குருவால் மந்திரோபதேசம் பெற்றுச் சிவ பூஜை செய்ய வேண்டும்.

செய்தித் திரட்டு

18 வருஷம் தூங்கிய பெண்

தென்னாபிரிக்காவைச் சேர்ந்த ஜோகான்ஸ் பார்க்கிலுள்ள ஆஸ்பத்திரி யொன்றில் 18 வருடங்கள் ஒரே தூக்கம் தூங்கிய ஒரு பெண் தற்போது சமீபத்தில் கண் விழித் தெழுந்தாள். 1910ம் வருடம் இவளுடைய காதலன் இறந்தபோது இவளுக்கு 20 வயதானதாயும், தன் காதலனை இழந்த வருத்தத்தால் இப்பெண்ணுக்கு ஒரு விதக் கொடிய வலிப்பு கண்டு அதன் பிறகு அப்பெண் ஒரே தூக்கத்திலாழ்ந்து விட்டதாயும், அப்பெண்ணை அத் தூக்கத்திலிருந்து எழுப்ப, என்ன செய்தும் பயன் படாமல் 18 வருடங்கள் தூங்கிச் சமீபத்தில் தானாகக் கண் விழித் தெழுந்த தாயும் தெரிகிறது.

அப்பெண் இவ்வாறு ஓயாமல் தூக்கத்திலிருந்த போது இரண்டு மணிக்கு ஒரு தரம் மெல்லிய ரப்பர்க் குழாய் மூலமாக வைத்திய நிபுணர்கள் ஆகாரத்தைச் செலுத்தி வந்தார்களாம். இப்பெண் சிறிது சிறிதாகத் தான் கண் விழித் தெழுந்த தாயும், விழித்தெழுந்த அப்பெண் வெளியில் தலை காட்டாமல் வெட்கப் பட்டுக் கொண்டு யாரை யாவது பார்த்தவுடன் தன் தலையை மூடிக் கொள்ளுவதாயும், அப்பெண் இது வரை ஏதோ நன்கறிய முடியாத இரண்டொரு வார்த்தைகள் மட்டுந் தான் பேசியதாயும் சொல்லுகின்றனர்.

பதினெட்டு வருடம் தூங்கி எழுந்த அப்பெண் உலகமே முற்றும் மாறுதலடைந்திருக்கக் கண்டு வியப் படைந்தாள். அப்பெண் தூங்கத் துவங்கிய போது ஆகாய விமானத்தைக் குறித்துப் பேச்சுத் தானிருந்த தாயும், அக்காலத்தில் விமானங்கள் பறக்கக் கூடுமா வென்பதைக் குறித்த ஆராய்ச்சிகள் முற்றுப் பெறாதிருந்த தாயும் ஆகாச வசனி என்பது கனவிலும் கருதப் படாத ஒரு சம்பவமாக இருந்ததாயும் சொல்லுகின்றனர். மேலும் உலகமகா யுத்தம் ஏற்படக் கூடுமோ வென்ற விஷயம் 1910-ம் வருடத்தில் சந்தேகத்திலிருந்த தாயும் கூறுகின்றனர். ஆனால் 18 ஆண்டுகள் நெடுந் தூக்கம் தூங்கி விழித் தெழுந்த அப்பெண் உலக சரித்திரத்திலேயே கேட்டிராத

கொடிய மகா யுத்தத்தின் கஷ்ட நஷ்டங்களிலிருந்து விடுபட்டு முன்னேற உலகம் பெருமுயற்சி செய்து வருவதைக் காண அவளுக்கு அளவற்ற வியப்புண்டாகுமென்பதில் ஐயமில்லை.

---

18 அடி வாலுள்ள சேவல்

ஜப்பான் சேவல் நூதனம்

டோரண்டோவில் சமீபத்தில் நடைபெறும் ஜீவ வர்க்க கண் காட்சிக்கு ஜப்பானிலிருந்து வெள்ளிப் புள்ளிகளுள்ளதும் 18 அடி நீளமான வால்களுள்ளதுமான மூன்று சேவல்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. இந்தச் சேவல்கள் ஜப்பானியரால் பரிசுத்தமான சேவல்களாகக் கருதப்படுகின்றன. இந்த மாதிரி சேவல்கள் ஜப்பானை விட்டு வெளி நாட்டுக்கு அனுப்பப் படுவது இதுதான் முதல் தடவை என்று சொல்லப்படுகிறது.

தென்னாப்பிரிக்காவில் நூறு வயதிற்கு மேலான ஒருவனும் 95 வயதுக்கு மேற்பட்டவர் நால்வரும் கலியாணம் செய்துகொண்டார்களாம். 85 வயதுக்கு மேற்பட்ட மாப்பிள்ளைகள் அங்கு 300 பேர் உண்டாம். நூறு வயதிற்கு மேற்பட்ட மணப்பெண்கள் மூவராம்! தென்னாப்பிரிக்கா அரசாங்கத்தார் வெளியிட்டுள்ள கலியாணக் கணக்கு அறிக்கையில் இவை காணப்படுகின்றன.

ஜப்பானிய குடித்தனங்களில், தலை சீவி விழும் ரோமங்களைச் சேர்த்து வைத்து மேஜோடுகள் செய்கிறார்கள். அவைகளை நீண்ட கயிறுகளாகப் பின்னிப் பலமாதிரியான மேஜோடுகள் நெய்கிறார்கள். மனித ரோமம் குளிரைத் தடுக்கும் என்ற நம்பிக்கையினால் சாதாரண மேஜோடுகளுக்கு மேல் இவைகளை அணிகிறார்கள்.

வர்த்தக ஸ்தலங்களில் பணத்தை எண்ணி நாணயவாரியாகப் பிரித்துக் கணக்கெழுதுவதற்காகப் புதிய இயந்திரமொன்றைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். இந்த இயந்திரம் ஒருவர் நான்கு மணி நேரத்தில் செய்யும் வேலையை ஒரே மணி நேரத்தில் செய்து விடுகிறது.

மதிப்புரை

"பாம இச்சாஞான தீபிகை எனும் காரிய சித்தாந்தம்." இது தத்துவ ஞானி ஸ்வீடன் பர்க் என்பவர் எழுதிய "வெளிப்படுத்தின விசேஷ விளக்கம்" என்னும் லத்தின் நூலின் ஒருபகுதி. முன் "நியூரிபார்மர்" பத்திராதிபரான திரு. D. கோபால் செட்டியாரவர்களால் மொழி பெயர்க்கப்பட்ட தமிழ் நூல். ஆசிரியர் ஸ்வீடன்பர்க் சிறந்த அனுபவமுடைய தத்துவ ஞான தரிசினி என்பதும் அவர் கொள்கைகள் பல சைவ சித்தாந்த உண்மைகளை யொத்து மிளிர்கின்றன என்பதும் நண்பர்கள் பலர் அறிந்தவையாம். இந்நூலில் பாம இச்சா ஞான சத்திகளின் தன்மை காரியம் முதலியவற்றை விவரித்து யோக சூக்கும உண்மைகளை விளக்கி, கிறிஸ்தவ விவிலிய நூல் (Bible) வாக்கியங்கள் பலவற்றிற்குப் புத்துரை பலரும் வியக்கக் கண்டுள்ள பான்மை நோக்கத் தகுந்தது. சைவாகமங்களில் விவரித்துள்ள இச்சா ஞான சத்திகளின் தன்மை, காரியம் முதலியன ஆசிரியர் ஸ்வீடன் பர் கருத்துக்களோடு எம்மட்டில் பொருந்தியும் எம்மட்டில் திரிந்தும் நிற்கின்றன என்பது அறிஞர் நன்காராயற் பாலது; மேலைத்திசை ஞானிகள் நூல்களைப் படித்து நம்முடைய நூல்களோடு ஒப்பிட்டு நம்மறிவை விசாலப்படுத்திக் கொள்வது மிகச் சிறந்த கொள்கை. நாம் இந்நூலை நண்பர்கள் அனைவரும் வாசிக்க வேண்டுமென மிகமகிழ்ச்சியோடு கேட்டுக் கொள்கிறோம். வேண்டுவோர் மொழி பெயர்ப்பாசிரியர் திரு. D. கோபால செட்டியார் (முன் "நியூரிபார்மர்" பத்திராதிபர்) இராயப்பேட்டை, சென்னை என்ற விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்க. விலை ரூபா ஒன்று.

*** *** ***

ஸ்ரீ சிவஞான போதப் பொழிப்புரை:—இப்பெயர் கொண்ட ஒரு சிறு அழகிய நூல் வரப்பெற்றோம். சைவ சித்தாந்தத்திற்கு அடிப்படையாயுள்ள சிவஞான போதப் பன்னிரு சூத்திரங்களுக்கும் ஸ்ரீ சிதம்பரம் ஸ்ரீ சிவஞானத் திருத்தளி சிவ ஸ்ரீ செப்பறை சுவாமிகள் கூறிய உரையை அவரிடங் கேட்டுணர்ந்தபடி திருநெல்வேலி திரு. T. S காந்திமதி நாதன் பி. ஏ. அவர்கள் பொழிப்பாகத் திரட்டிப் புத்தகரூபமாக அச்சிட்டுதவியது போற்றத்தக்கதாகும். இந்நூலின் கண்ணுள்ள குறிப்புரைகள் பாராட்டத் தக்கவை. வேண்டுவோர் திரு. ஆர். வி. சொக்கலிங்கம் பி. ஏ. காரியதரிசி, League of Non-Brahmin Youth, Millar's Road, கீழ்ப்பாக்கம், சென்னை. என்ற விலாசத்திற் கெழுதிப் பெற்றுக்கொள்க.

187124

சைவ சித்தாந்த மஹா சமாஜம்—சென்னை.

1928-ஞு ஆகஸ்டு மாதத்திய வரவு செலவு கணக்கு.

வரவு

விவரம்	ஆகஸ்டு மாதம் ரூ.	அ.	பை.	1927 டிசம்பர் 1௳ முதல் 1928 ஆகஸ்டு 31௳ வரை ரூ.	அ.	பை.
வேளாள ஐக்கிய நாணய சங்கம் சேவிங்ஸ் பாங் ...	58	0	0	88	0	0
தபாலாபீஸ் சேவிங்ஸ் பாங் ...	...	...	...	57	0	0
சித்தாந்தம் சந்தா வசூல் ...	32	0	0	762	2	0
சித்தாந்தம் அச்சிட நன்கொடை ...	...	...	...	365	0	0
விளம்பர சார்ஜ் ...	...	...	...	6	0	0
வருடாந்தர மீட்டிங்கிற்கு நன்கொடை ...	...	...	...	35	0	0
வி. பி. தபால் வரவு ...	1	14	0	26	9	0
சந்தா முன் பணம் ...	...	...	...	3	8	0
மொத்தம் ...	91	14	0	1343	3	0
ஆரம்ப இருப்பு ...	23	4	9	74	8	6
	115	2	9	1417	11	6

செலவு

விவரம்	ஆகஸ்டு மாதம் ரூ.	அ.	பை.	1927 டிசம்பர் 1௳ முதல் 1928 ஆகஸ்டு 31௳ வரை ரூ.	அ.	பை.
வேளாள ஐக்கிய நாணய சங்கம் சேவிங்ஸ் பாங் ...	...	...	...	610	0	0
தபாலாபீஸ் சேவிங்ஸ் பாங் ...	11	6	0	82	4	0
சித்தாந்தம் அச்சுக்கூலி காகிதம் உள்பட ...	58	12	0	422	0	0
பிளாக்குகள் ரப்பர் ஸ்டாம்புகள் ...	...	...	...	12	8	0
மீட்டிங் நோட்டீஸ், பிரவேச விண்ணப்பம் அச்சுக் கூலி ...	...	...	...	5	0	0
வருடாந்தர மீட்டிங்கிற்கு அறிக்கை Etc.,	...	...	...	73	8	0
தபால் செலவு ...	17	8	0	166	1	6
கணக்குப் புஸ்தகம் பேனா முதலியன ...	0	3	6	8	9	0
சில்லறைச் செலவு ...	3	8	6	14	0	3
மொத்தம் ...	91	6	0	1393	14	9
முடிவு கையிருப்பு ...	23	12	9	23	12	9
	115	2	9	1417	11	6

சமாஜத்தின் பொருள் வலிவு

வேளாள ஐக்கிய நாணய சங்கத்தில்	ரூ.	522	0	0
தபாலாபீஸ் சேவிங்ஸ் பாங்கியில்	,,	25	4	0
கையிருப்பு	,,	23	12	9
மொத்தம்	,,	571	0	9

தி. க. சுந்தரம் பிள்ளை, காரியதரிசி.

C. இரத்தின முதலியார், பொருட் காப்பாளர்.

வே. மாணிக்க முதலியார், கணிதபரிசோதகர்.

தமிழ் நாடெங்கணும் புகழ்வாய்ந்த எங்கள் நிகரிலாத

"ஆநந்த குணபோதினி"

ஆடி மாதமுதல் ஆங்கில மாத சஞ்சிகைகளை யொப்ப நவீன நாகரிக உருவுடன்

அமிர்த குணபோதினி

என்னும் புதிய பெயர் தாங்கிப் புதுவிதமாக

3-வது ஆண்டு] வெளிவருகின்றது. [3-வது ஆண்டு

பிரபல ஆசிரியர் ஸ்ரீமான் S. G. இராமாநுஜலு நாயுடு அவர்களால் இப்பத்திரிகை எழுதப்பட்டு வருகிறது.

அநுபவ ஞானபோதனையில் இதுபோன்ற முதன்மையான மாத சஞ்சிகை வேறில்லை. கௌரவமான விகடம் இப்பத்திரிகை யொன்றில்தான் காணலாம். இதுவே விவேகசாரம், இதுவே ஜக வினோதினி, இதுவே விசித்திர விலாஸம், இதுவே விகடப் பொக்கிஷம், இதுவே அநுபவஞானவாரிதி, இதுவே அற்புத ஞானபோதகம், இதுவே ஆச்சரிய சிந்தாமணி, இதுவே ஆநந்த தீபம் என்று எண்ணலாம். பதினாயிரம் சந்தாதாரர்களை உடையது. இன்னும் பல்லாயிரம் சந்தாதாரர்கள் தேவை. பார்க்க அழகாய், படிக்க இனிமையாய், நினைக்க மனோரமா யிருப்பது எது? எங்கள் "அமிர்த குணபோதினி"யே. 56-பக்கங்களுடனும் ஓர் ரூபாயைச் சந்தாவாகக் கொண்டுள்ள உயரிய மாதப்பத்திரிகை தமிழ் நாட்டில் இது ஒன்றேதான். இதற்குச் சமமான தமிழ் மாதப் பத்திரிகை எதுவுமே கிடையாது. இது யாவரும் அறிந்த விஷயமே. வருஷ சந்தா ரூபாய்ஒன்றே. வெளிநாடு ரூ. 1—4—0. மாதிரி காப்பி இனும்!

1-9-28. தி. இராஜகோபால் முதலியார்,
28-2-29. அமிர்த குணபோதினி ஆபீஸ், 302, தங்கசாலை வீதி, சென்னை.

ஆங்கிலேயம் படிக்க விரும்பும் அன்பர்களே! ஏன் கவலைப் படுகிறீர்கள்?

உபாத்தியாயர் இல்லாமல்

60 நாளையில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளலாம்.

2,50,000 ஜனங்களால் வாசித்துப் பிரபல்யமடைந்த

ஆங்கில ஆசான்

அல்லது

ஆங்கில போதினி

தமிழ் எழுத்துக்களை வாசித்தால்

இங்கிலீஷ் பதங்கள் சுலபமாய்த் தெரிந்து கொள்ளலாம்.

இது 9-ம் பதிப்பு 800 பக்கம்கொண்ட ஒரு பெரிய புத்தகம்.

உபாத்தியாயர் இல்லாமல் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக் கொள்ள உதவும் புத்தகம் இதுதான். இது மாதர்களுக்கும், வியாபாரிகளுக்கும், தொழிலாளிகளுக்கும் மிகவும் முக்கியமானது. இவ் வெட்டாம் பதிப்பில் 1½ ரூபாயிலிருந்து 3000 ரூபா வரையில் மிக கிரமப்பட்டு மாதச் சம்பளக் கணக்கு போடப்பட் டிருக்கிறது.

முழு கலிகோ பயிண்டு புத்தகம் 1-க்கு விலை ரூ. 2.

பினாங்கு, சிங்கப்பூர் தேசங்களிலிருந்து முன் பணம் அனுப்பினால் புஸ்தகம் ரிஜிஸ்டர் செய்து அனுப்பப்படும்.

போலி புத்தகங்களால் ஏமாற வேண்டாம்.

1-9-28. தி. இராஜகோபால் முதலியார்,
28-2-29. நெ. 302, தங்கசாலை தெரு, சென்னை.